


INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

# கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையில்

## இலங்கையில் மாற்றுத்திறனாளி பெண்களின் யதார்த்த நிலை

உவினி பண்டித

# கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையில்

## இலங்கையில் மாற்றுத்திறனாளி பெண்களின் யதார்த்த நிலை

உவினி பண்டித

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்

**2025**

கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையில்: இலங்கையில் மாற்றுத்திறனாளி பெண்களின் யதார்த்த நிலை

© 2025 இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம

2, கின்சி டெரஸ், கொழும்பு 8, இலங்கை

மின்னஞ்சல: admin@ices.lk

இணையதளம் : www.ices.lk

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

ISBN: 978-624-5502-44-8

இந்த வெளியீடு டயகோனியாவால் நிதியளிக்கப்பட்ட ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.
இந்த வெளியீட்டின் பதிப்புரிமை சர்வதேச இன ஆய்வுகளுக்கான மையத்திற்கு (ICES) சொந்தமானது. இந்த புத்தகத்தின் எந்த பகுதியும் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளருக்கு உரிய ஒப்புதலுடன் மீண்டும் உருவாக்கப்படலாம். ஆய்வில் வெளிப்படுத்தப்பட்ட விளக்கங்கள் மற்றும் முடிவுகள் ஆசிரியரின் கருத்துகள் மற்றும் ICES அல்லது நன்கொடையாளரின் கருத்துகள் மற்றும் கொள்கைகளை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES

People Change the World Diakonia

அட்டைப்படம்: கலைஞர் தெரியவில்லை, Canva.com ஐப் பயன்படுத்தி மாற்றியமைக்கப்பட்டது

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்: யாழினி சரண்யா சிவசுப்ரமணியம்

# கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையில்

## இலங்கையில் மாற்றுத்திறனாளி பெண்களின் யதார்த்த நிலை


**உவினி பண்டித***


---


* உவினி பண்டித கொழும்பில் உள்ள இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் ஒரு ஆய்வாளர் ஆவார்.

# நன்றியுரை

இந்த ஆய்வை மேற்கொள்ள என்னை ஊக்குவித்த மற்றும் இந்தச் செயல்முறை முழுவதும் தொடர்ச்சியான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு வழங்கிய கொழும்பில் உள்ள இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் நிர்வாக பணிப்பாளர் கலாநிதி மரியோ கோமஸ் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

குழுக் கலந்துரையாடல்களை நடத்துவதில் உதவிய மற்றும் ஆதரவளித்த திராணி விஜேவிக்ரம மற்றும் யோஹானி தொடங்கொட ஆகியோருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குழுக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்வதில் அவர்கள் வழங்கிய விலைமதிக்க மடியாத ஆதரவிற்காக சுனிலா பெண்கள் மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தி அறக்கட்டளையைச் (பொலன்னறுவை) சேர்ந்த (மறைந்த) திருமதி சாந்தனி ஹேரத் அவர்கட்கும், உரிமைகளுக்கா நாங்கள் (கண்டி) அமைப்பைச் சேர்ந்த திருமதி நிஷா ஷரீ.ஃப் அவர்கட்கும், சூரியா பெண்கள் அபிவிருத்தி மையத்தை (மட்டக்களப்பு) சேர்ந்த திருமதி அனுராதா ராஜரெட்ணம் மற்றும் ORHAN (வவுனியா) ஐச் சேர்ந்த திருமதி டி. ஜெயகலாதேவி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, இந்த ஆய்வில் பங்கேற்ற அனைத்து பெண்களுக்கும் தங்கள் கதைகளை (அனுபவங்களை) என்னிடம் நம்பிப் பகிர்ந்து கொண்டதற்கும், தங்கள் வாழ்க்கையைப் பற்றி வெளிப்படையாகப் பேசியதற்காகவும் நான் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் இல்லாமல் இந்த அறிக்கை சாத்தியமாகியிருக்காது. இது அவர்களின் யதார்த்தங்களை பிரதிபலிக்கும் என்றும், மேலும் அணுகக்கூடிய, உள்ளடக்கிய மற்றும் நீதியான ஒரு உலகத்திற்கு நம்மை நெருக்கமாக நகர்த்த உதவும் என்றும் நான் நம்புகிறேன்.

# உள்ளடக்கம்


அறிமுகம் ........................................ 1

பின்னணி ........................................ 4

மாற்றுத்திறனாளிப் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ........................................ 7

போதுமான அரச ஆதரவு மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு இல்லாமை ........................................ 7

பாலியல் இனப்பெருக்க சுகாதார சேவைகளுக்கான (SRHS) வரையறுக்கப்பட்ட அணுகல் ........................................ 12

மாற்றுத்திறனாளி அடையாள அட்டை இல்லாமை ........................................ 17

அணுகக்கூடிய சுகாதார சேவைகள் இல்லாமை ........................................ 21

அணுகக்கூடிய தொழிற்கல்வி பயிற்சித் திட்டங்களிலிருந்து விலக்கு ........................................ 25

போதுமான அணுகக்கூடிய உதவி சாதனங்கள் இல்லை ........................................ 29

அணுகக்கூடிய கல்விக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் ........................................ 33

பரிந்துரைகள் ........................................ 40

அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை ........................................ 40

(CEDAW)குழுவிற்கான பரிந்துரைகள் ........................................ 40

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ........................................ 45

உடன்படிக்கை (CEDAW) குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகள் ........................................ 45

முடிவுரை ........................................ 47

இணைப்பு ........................................ 48

விடய ஆய்வு: குசுமின் கதை ........................................ 48

விடய ஆய்வு: நிலந்தியின் கதை ........................................ 52

விடய ஆய்வு: மாலினியின் கதை ........................................ 56

# அறிமுகம்

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) என்பது பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய சர்வதேச உடன்படிக்கையாகும், மேலும் அவர்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்ற அரச தரப்பு மீது ஒரு பிணைப்புப் கடமையை வைக்கிறது. இலங்கை 1981 இல் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கையை அங்கீகரித்தது, இதன் மூலம் பெண்களின் உரிமைகளை உணர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து CEDAW குழுவிற்கு அவ்வப்போது அறிக்கைகளை சமர்ப்பிக்கும் கடமை உட்பட அதன் கொள்கைகளை நிலைநிறுத்த உறுதியளித்தது.

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையமானது (ICES) பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை குழுவுடன் (CEDAW) நீண்டகால (ஈடுபாட்டைக்) தொடர்பினைக் கொண்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில், இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையமானது (ICES) இலங்கையில் மாற்றுத்திறனாளிப் பெண்களின் (WWDs) நிலைமையை மையமாகக் கொண்ட ஒரு நிழல் அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த வேலையை அடிப்படையாகக் கொண்டு, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையமானது மீண்டும் 2025 இல் இலங்கையின் மிகச் சமீபத்திய அரச அறிக்கையை குழுவின் மதிப்பாய்விற்கு தெரிவிக்க ஒரு நிழல் அறிக்கையை சமர்ப்பித்தது. சிவில் சமூக அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட நிழல் அறிக்கைகள் ஒரு மாற்று மற்றும் சுயாதீனமான முன்னோக்கை வழங்குகின்றன, மற்றும் அதிகாரப்பூர்வ அரசாங்க அறிக்கைகளில் கவனிக்கப்படாத பெண்கள் மற்றும் சிறுமிகளின் வாழ்க்கை யதார்த்தங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதில் முக்கியமானவை.

பெப்ரவரி 2025 இல், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை குழு இலங்கையின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து அதன் இறுதி அவதானிப்புகளை வெளியிட்டது. இலங்கை அரசாங்கத்திற்கு

(GoSL) குழுவின் பல பரிந்துரைகள், குறிப்பாக மாற்றுத் திறனாளிப் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகள் தொடர்பாக, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையமானது இன் நிழல் அறிக்கையில் முன்வைக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளால் நேரடியாகத் தெரிவிக்கப்பட்டன. இது இலங்கையில் மாற்றுத்திறனாளிப் பெண்கள் அனுபவிக்கும் குறுக்குவெட்டு பாகுபாட்டை நிவர்த்தி செய்வதற்கான அவசரத் தேவையின் முக்கியமான அங்கீகாரத்தைக் குறித்தது.

இருப்பினும், குழுவின் அறிக்கையில் இந்தப் பரிந்துரைகளைச் சேர்ப்பது முதல் படி மட்டுமே. அரசாங்கத்தால் செயல்படுத்தப்படுவது தானாகவே நடக்காது. இதற்கு தொடர்ச்சியான கண்காணிப்பு, பொது அழுத்தம் மற்றும் சிவில் சமூகம், மாற்றுத்திறனாளிகள் அமைப்புகள் (DPOs), பெண்கள் உரிமை ஆர்வலர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் தொடர்ச்சியான வாதங்கள் தேவை. இந்த விரிவாக்கப்பட்ட அறிக்கை, அசல் நிழல் அறிக்கையின் உள்ளடக்கத்தை பொதுமக்களுக்கு, குறிப்பாக அடிமட்ட மட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு மிகவும் பரவலாக அணுகக்கூடியதாக மாற்றுவதன் மூலம் இந்த முயற்சிகளை ஆதரிக்க முயல்கிறது.

எனவே இந்த அறிக்கை 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிழல் அறிக்கையின் விரிவாக்கப்பட்ட பதிப்பாகும். நிழல் அறிக்கைகளில் விதிக்கப்பட்ட சொல் வரம்பு காரணமாக, ஆய்வுச் செயல்பாட்டின் போது சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின் முழு அகலத்தையும் ஆழத்தையும் அசல் சமர்ப்பிப்பால் உள்ளடக்க முடியவில்லை. இந்தப் பதிப்பில் கொழும்பு, கண்டி, பொலன்னறுவை, மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் சுமார் 50 மாற்றுத்திறனாளிப் பெண்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட குழுக் கலந்துரையாடல்ககளிலிருந்து (FGDs) பெறப்பட்ட மேலதிக பகுப்பாய்வு, மேற்கோள்கள் மற்றும் விடய ஆய்வுகள் ஆகியவை அடங்கும். கிழக்கில் மட்டக்களப்பு மற்றும் வடக்கில் வவுனியா ஆகியவை உள்நாட்டுப் போரின் (1983–2009) நீண்டகால விளைவுகளுடன் இன்னும் போராடும் பகுதிகளாகும், அவை இந்தப்

பகுதிகளில் உள்ள மாற்றுத்திறனாளிப் பெண்களின் வாழ்க்கையை தொடர்ந்து வடிவமைக்கின்றன.

குழுக் கலந்துரையாடல் ஒக்டோபர் மற்றும் நவம்பர் 2024 க்கு இடையில் நடத்தப்பட்டன: கொழும்பு (ஒக்டோபர் 10), பொலன்னறுவை (ஒக்டோபர் 24), கண்டி (ஒக்டோபர் 29), மட்டக்களப்பு (நவம்பர் 6) மற்றும் வவுனியா (நவம்பர் 7). இந்தக் கலந்துரையாடல்கள் உள்ளூர் சமூக அடிப்படையிலான அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டன, அவற்றில் சுனிலா பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அறக்கட்டளை (பொலன்னறுவை), உரிமைகளுக்காக நாங்கள் (கண்டி), சூரிய பெண்கள் மேம்பாட்டு மையம் (மட்டக்களப்பு), மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு அமைப்பு (ORHAN) (வவுனியா) ஆகியவை அடங்கும். பல்வேறு உடல், உணர்வு மற்றும் அறிவுசார் மாற்றுத்திறன் உள்ள பெண்கள், மாற்றுத்திறனாளி சிறுமிகளின் தாய்மார்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்பாளர்களில் அடங்குவர். அனைத்து பங்கேற்பாளர்களிடமிருந்தும் வாய்மொழி ஒப்புதல் பெறப்பட்டது, மேலும் அவர்களின் ரகசியத்தன்மையைப் பாதுகாக்க கவனம் செலுத்தப்பட்டது.

இந்த அறிக்கை, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை மற்றும் 2016 இல் இலங்கை அங்கீகரித்த மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை (CRPD) ஆகிய இரண்டின் கீழும் இலங்கையின் கடமைகளுக்கு ஏற்ப மாற்றுத்திறனாளிப் பெண்களின் குரல்களை வலுப்படுத்துவதையும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் உணர்ந்து கொள்வதற்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பொதுமக்களின் ஈடுபாட்டிற்கான ஒரு வரைபடத்தையும் வழங்குகிறது: இந்தப் பிரச்சினைகளை புலப்படும்படியும் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதன் மூலம், இந்த அறிக்கை சிவில் சமூகம், ஊடகங்கள் மற்றும் பொதுமக்களை பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு அரசாங்கத்தை பொறுப்பேற்க வைக்க அழைக்கிறது.

# பின்னணி

2012 மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பின்படி, இலங்கையில் அப்போது 20 மில்லியன் மக்கள் தொகையில் அண்ணளவாக 8.7% பேர் மாற்றுத்திறனாளிகள், அவர்களில் 57% பேர் பெண்களாக இருந்தார்கள்.[1] இந்த மாற்றுத்திறன்களில் பார்வை, செவித்திறன், இயக்கம், அறிவாற்றல், சுய கவனிப்பு மற்றும் தொடர்பாடல் ஆகிய குறைபாடுகள் அடங்கும். பார்வையற்ற தன்மை, பார்வைக் குறைபாடுகள், கண் நோய் மற்றும் இயலாமை ஆகியவற்றில் நடத்தப்பட்ட இலங்கையின் கணக்கெடுப்பானது, மாற்றுத்திறனுடைய தன்மையின் பாதிப்பு ஆண்களை விட பெண்களில் கணிசமானளவு அதிகமாக உள்ளது என்றும் அது குறிப்பாக கிராமப்புற மாவட்டங்களில் குறைந்த சமூக-பொருளாதார அடுக்குகளில் உள்ளதென்றும் தெரிவிக்கின்றது.[2] 2014 ஆம் ஆண்டு ஊடக ஆதாரங்கள், 2040 ஆம் ஆண்டுக்குள் இயலாமை விகிதம் 24.4% ஆக உயரக்கூடும் என்று சுகாதார[3] அமைச்சின் கணிப்புகளை 2014 ஆம் ஆண்டு ஊடக வட்டாரங்கள் மேற்கோள் காட்டின. எனவே, மாற்றுத்திறனாளிப் பெண்களின் உரிமைகளை செயல்படுத்துவதை அரசு உறுதி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

2016இல் ஐக்கிய நாடுகள் சபையின் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் உடன்படிக்கை (CRPD) மற்றும் 1981இல் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை (CEDAW) ஆகியவற்றிற்கு இலங்கை ஒப்புதல் அளித்த போதிலும், மாற்றுத்திறனாளி பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் உணர்ந்து கொள்வதில் தேசிய முன்னேற்றம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இந்த சர்வதேசக் கடமைகளை

---

[1] ஆதாரம்:http://www.statistics.gov.lk/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 20/08/2025)

[2] ஆதாரம்: https://www.iapb.org/wp-content/uploads/2015/05/National-Survey-of-Blindness-A-Report-2014-2015.pdf (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 20/08/2025)

[3] ஆதாரம்: https://pulse.lk/everythingelse/disability-in-sri-lanka/ (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 10/08/2025),
ஆதாரம்: https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC9062655/#fn0007 (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 30/08/2025)

உள்நாட்டுச் சட்டத்தில் இணைப்பது போதுமானதாக இல்லை. பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையானது (CEDAW) செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசதரப்பு அறிக்கைகளிலும் பெரும்பாலும் மாற்றுத்திறனாளிப் பெண்களைப் பற்றிய போதுமான தகவல்களைக் கொண்டிருக்கவில்லை, இது அவர்களின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதில் பரந்த இடைவெளியை பிரதிபலிக்கிறது. தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு, இயலாமை (மாற்றுத்திறன்) பரவல் குறித்த பாலின ரீதியில்-பிரிக்கப்பட்ட தரவை வழங்கினாலும், கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் பங்கேற்பு மற்றும் சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான அணுகல் போன்ற முக்கியமான பகுதிகளுக்கு வரும்போது அத்தகைய தரவு பெரும்பாலும் இல்லை. பிரிக்கப்பட்ட தரவுகளின் இந்த பற்றாக்குறை, மாற்றுத்திறனாளிப் பெண்கள் எதிர்கொள்ளும் குறுக்குவெட்டு தடைகளை மதிப்பிடுவதையும், இலக்கு வைக்கப்பட்ட கொள்கை பதில்களை வடிவமைப்பதையும் கடினமாக்குகிறது.

இலங்கையில் இந்த மாற்றுத்திறனாளி உரிமைகளை உணர்ந்து கொள்வதற்கான முக்கிய தடைகளில் ஒன்று, நிர்வாக மற்றும் சட்டமன்றக் கிளைகள் இரண்டாலும் தொண்டு மற்றும் நலன்புரி அடிப்படையிலான அணுகுமுறையின் தொடர்ச்சியான ஆதிக்கம் ஆகும். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் உடன்படிக்கை (CRPD) இல் பொதிந்துள்ள மனித உரிமைகள் மாதிரியை இந்த கட்டமைப்பு நிலைநிறுத்தத் தவறிவிட்டது, இதன் மூலம் அரசு நிறுவனங்களின் பொறுப்புணர்வை பலவீனப்படுத்துகிறது. அரசாங்கம் பலமுறை விரிவான மாற்றுத்திறனாளிகள் சட்டத்தை உறுதியளித்திருந்தாலும், அத்தகைய சீர்திருத்தங்கள் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.[4]

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை குறிப்பாக மாற்றுத்திறனாளிப் பெண்களின் உரிமைகளை (WWD) குறிப்பிடவில்லை என்றாலும், உறுப்புரை 3 பாலினம் மற்றும் மாற்றுத்திறன் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதை தடை செய்கிறது. பெண்களுக்கு எதிரான

[4] தற்போதைய சட்டமான, மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (1996) காலாவதியானதாகக் கருதப்படுகிறது.

பாகுபாடுகளை நீக்குவதற்கான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவின் பொதுப் பரிந்துரை 18, இலங்கை உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான சமவாயத் தரப்பினரை, இயலாமையுடன் கூடிய பெண்கள் பற்றிய தகவல்களைத் தங்கள் கால அறிக்கைகளில் சேர்க்குமாறு வலியுறுத்துகிறது. கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் பொது வாழ்வில் அவர்களுக்கு சமமான அணுகலை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும். இருப்பினும், சமீபத்திய அரச அறிக்கைகளில் இலங்கை இந்தக் கடமைகளை போதுமான அளவு நிறைவேற்றவில்லை. எனவே, இந்த அறிக்கை, இந்த பரந்த சட்ட மற்றும் கொள்கை வெற்றிடத்திற்குள் மாற்றுத்திறனாளிப் பெண்கள் வாழ்ந்த அனுபவங்களை நிலைநிறுத்துவதையும், மாற்றுத்திறன் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் குரல்களை மையமாகக் கொண்ட முறையான சீர்திருத்தத்திற்கான அவசரத் தேவைக்கு கவனத்தை ஈர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# மாற்றுத்திறனாளிப் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

## போதுமான அரச ஆதரவு மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு இல்லாமை

இலங்கையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மாற்றுத்திறனாளிகள் இருந்தபோதிலும், அரசு உதவிக்கான அணுகல் குறைவாகவும், சீரற்றதாகவும், பெரும்பாலும் விலக்களிப்பதாகவும் உள்ளது. அரசாங்கம் தற்போது மாற்றுத்திறனாளிகளில் ஒரு சிறிய பகுதியினருக்கு ரூபா 6,000 (அண்ணளவாக 25 USD)[5] மாதாந்திர வாழ்க்கை உதவித்தொகையை வழங்குகிறது. இருப்பினும், 2012 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாட்டின் 21 மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகையில் அண்ணளவாக 8.7% பேர் ஏதேனும் ஒரு வகையான மாற்றுத்திறனாளிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2012 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இலங்கையில் சுமார் 1.7 மில்லியன் மாற்றுத்திறனாளிகள் இருப்பதாகக் கூறப்பட்டாலும்,[6] 2023 ஆம் ஆண்டில், 72,000 நபர்கள் மட்டுமே இந்தக் கொடுப்பனவைப் பெற்றனர்,[7] இது தேவைப்படும் மக்களுக்கும் உண்மையில் ஆதரவைப் பெறுபவர்களுக்கும் இடையிலான ஒரு பெரிய இடைவெளியை வெளிப்படுத்தியது. மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவு காலாவதியானதாக இருக்கலாம் என்றாலும், தகுதி எவ்வாறு மதிப்பிடப்படுகிறது மற்றும் உதவி விநியோகிக்கப்படுகிறது என்பதில் இந்த முரண்பாடு ஆழமான குறைபாடுகளைக் குறிக்கிறது.

தகுதி அளவுகோல்கள், ஆதரவு அதிகம் தேவைப்படுபவர்களுக்கான அணுகலை மேலும் கட்டுப்படுத்துகின்றன. உதாரணமாக, வேலையில் இருக்கும் மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு உதவி மறுக்கப்படுகிறது, அவர்களின் வருமானம் உயிர்வாழ போதுமானதாக இல்லாவிட்டாலும், இயலாமையுடன் தொடர்புடைய

---

[5] ஆதாரம்: https://www.nspd.gov.lk/index.php/services (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 30/08/2025)

[6] ஆதாரம்: http://www.statistics.gov.lk/Population/StaticalInformation/CPH2011/CensusPopulationHousing2012-FinalReport (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 20/08/2025)

[7] ஆதாரம்: https://www.sundaytimes.lk/231231/news/underfunded-services-pile-on-indignities-for-disabled-people-in-the-north-and-east-543796.html (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 28/08/2025)

கூடுதல் செலவுகளை ஈடுகட்டுவது ஒருபுறம் இருக்கட்டும். இத்தகைய அளவுகோல்கள் இயக்க உதவிகள், உதவி சாதனங்கள், தொடர்ச்சியான சுகாதாரப் பராமரிப்பு மற்றும் ஆதரவு சேவைகளுடன் தொடர்புடைய செலவுகளைக் கணக்கிடத் தவறிவிடுகின்றன. குறிப்பாக குழந்தைகள் அல்லது பிற குடும்ப உறுப்பினர்களைப் பராமரித்தல் போன்ற குறுக்குவெட்டுப் பொறுப்புகளை எதிர்கொள்ளும் மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு தகுதியை தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் ரூபா 6,000 மாதாந்த வருமான வரம்பு தன்னிச்சையானது மற்றும் அடிப்படை வாழ்க்கைச் செலவுத் தரங்களுடன் தொடர்பில்லாதது.[8] இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் சராசரி குடும்பங்கள் நுகர்வுக்காக மாதத்திற்கு ரூபா 105,000 க்கும் அதிகமாக செலவிட்டன.[9] குழந்தைகள் அல்லது பிற குடும்ப உறுப்பினர்களைப் பராமரிப்பது போன்ற பொறுப்புகளைச் சுமக்கும் மாற்றுத்தினாளிப் பெண்களுக்கு நிலைமை இன்னும் கடுமையானது, இதனால் அவர்கள் வீட்டு மற்றும் இயலாமை (மாற்றுத்திறன்) தொடர்பான தேவைகளைப் பூர்த்தி செய்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

மேலும், மாற்றுத்திறனாளி உதவித்தொகை அதிகாரப்பூர்வமாக தனிநபர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டாலும், நடைமுறையில், இந்த முறை வழக்கமாக சுரண்டப்படுகிறது. பெறுநர் ஒரு பெண்ணாக இருந்தாலும் அல்லது குடும்பத்தின் பல உறுப்பினர்கள் தனித்தனி கொடுப்பனவுகளுக்கு உரிமை பெற்றிருந்தாலும் கூட, குடும்பங்களின் ஆண் தலைவர்கள் பெரும்பாலும் இந்த கொடுப்பனவுகளின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுகிறார்கள். திட்டத்தின் நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகளை சுரண்டுவதன் மூலம், ஆண்கள் அடிக்கடி தங்கள் அதிகாரத்தின் கீழ்

[8] CEDAW குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் (ஜனவரி 2025), இயலாமை உதவித்தொகை ரூபா 7,500 ஆகவும், தகுதி வருமான வரம்பு LKR 6,000 ஆகவும் இருந்தது. (இந்த விகிதம் எப்போது நிர்ணயிக்கப்பட்டது என்பது குறித்து சில முரண்பாடுகள் உள்ளன: NSPD வலைத்தளம் 2019 ஐக் குறிக்கிறது, அதே நேரத்தில் NSPD அதிகாரிகள் ஏப்ரல் 2024 என்று குறிப்பிட்டனர்). NSPD இன் அதிகாரிகளின் கூற்றுப்படி, கொடுப்பனவு மற்றும் வரம்பு ஏப்ரல் 2025இல் முறையே ரூபா 10,000 மற்றும் ரூபா 16,191 ஆக அதிகரிக்கப்பட்டது. இந்த மாற்றங்கள் காகிதத்தில் முன்னேற்றங்களாகத் தோன்றினாலும், கொடுப்பனவு இன்னும் உண்மையான வாழ்க்கைச் செலவை விடக் குறைவாகவே உள்ளது, இது 2024 இல் ஒரு வீட்டிற்கு மாதத்திற்கு சராசரியாக ரூபா 105,000 ஐ விட அதிகமாக இருந்தது. மேலும், கட்டுப்படுத்தப்பட்ட தகுதி அளவுகோல்கள் குறிப்பிடத்தக்க இயலாமை தொடர்பான செலவுகளை எதிர்கொள்ளும் பல WWD களை தொடர்ந்து விலக்குகின்றன, அதாவது போதுமான ஆதரவிற்கான கட்டமைப்பு தடைகள் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் உள்ளன.

[9] ஆதாரம்: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/aer/2024/en/Full_Text.pdf (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 20/08/2025)

கொடுப்பனவுகளை ஒருங்கிணைக்கிறார்கள், மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு அவர்களின் உரிமையை ஆதரிப்பதற்கான நேரடி அணுகலை மறுக்கிறார்கள். இந்த நடைமுறை பெண்களின் நிதி சுதந்திரத்தை பறிப்பதோடு மட்டுமல்லாமல், வீட்டுக்குள் இருக்கும் பாலின படிநிலைகளையும் வலுப்படுத்துகிறது.

பிரிவு அல்லது விவாகரத்து போன்ற சூழ்நிலைகளில் இதன் தாக்கம் குறிப்பாக பேரழிவை ஏற்படுத்தும், அங்கு ஆண்கள் தொடர்ந்து உதவித்தொகையைப் பெறுகிறார்கள், அதே நேரத்தில் பெண்கள் வளங்கள் இல்லாமல் தவிக்கின்றனர். மட்டக்களப்பிலிருந்து ஒரு பங்கேற்பாளர் விளக்கியது போல்:

*"இந்த முறை தவறு. குழந்தைகள் மாற்றுத்திறனாளி தாயுடன் இருக்கிறார்கள், தந்தை தொடர்ந்து உதவி பெறும் போது, அவள் இப்போது தன்னையும் தனது மாற்றுத்திறனாளிக் குழந்தைகளையும் எவ்வாறு ஆதரிக்க முடியும்? "*.[10]

இதேபோல், பொலன்னறுவையில், மாற்றுத்திறனாளி ஆண்களை மணந்த மூன்று மாற்றுத்திறனாளி பெண்கள் தங்கள் கணவர்கள் மட்டுமே கொடுப்பனவைப் பெற்றதாகக் கூறினர், அதே நேரத்தில் அவர்கள் விலக்கப்பட்டனர். குடும்பத்தின் ஒரு உறுப்பினருக்கு மட்டுமே உதவி பெற உரிமை உண்டு என்ற அனுமானத்தின் கீழ் அவர்கள் இருக்கும்போது, அவர்களின் விவரிப்புகள் ஆண் உறவினர்களை முறையான சுரண்டலின் மற்றொரு வடிவத்தைக் குறிக்கின்றன, கட்டுப்பாட்டைப் பராமரிக்க வேண்டுமென்றே தகவல்களையும் வளங்களையும் மறைக்கின்றன.

இந்த பிரச்சினை திருமண உறவுகளுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை, ஆனால் தந்தைவழி கட்டுப்பாட்டிற்கும் விரிவடைகிறது என்பதை பிற விவரிப்புகள் வெளிப்படுத்துகின்றன. பொலன்னறுவையைச் சேர்ந்த ஒரு பங்கேற்பாளர் தனது தந்தை கொடுப்பனவை எவ்வாறு ஏகபோகமாக வைத்திருந்தார் என்பதை விளக்கினார்.

[10] மட்டக்களப்பு குழுக்கலந்துரையாடல், 6ஆம் திகதி நவம்பர் 2024

*''அந்தப் பணம் நேரடியாக என் தந்தையிடம் சென்றது, அவர் தனக்குக் கிடைத்ததில் ஒரு பகுதியை மட்டுமே எனக்குக் கொடுப்பார்''.*[11]

ஒன்றாக எடுத்துக் கொண்டால், மாற்றுத்திறனாளிகளுக்கு முக்கிய ஆதரவை வழங்க வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டம், நடைமுறையில், ஆணாதிக்க அதிகார கட்டமைப்புகளை எவ்வாறு நிலைநிறுத்தியுள்ளது என்பதை இந்த விவரிப்புகள் வெளிப்படுத்துகின்றன. கொடுப்பனவை ஆண் நபர்களின் கைகளில் வைப்பதன் மூலம், இந்த அமைப்பு பெண்களின் நிதி சார்ந்திருப்பதை நிலைநிறுத்துகிறது மற்றும் குறிப்பாக புறக்கணிப்பு மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்குகிறது.

உதவித்தொகை பெறும் பெண்களுக்குக் கூட, இந்தத் தொகை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஒரு அத்தியாவசியப் பொருளை வாங்குவதற்கு கூட பல மாதங்களாக பணம் சேமிக்க வேண்டியிருப்பதாக பங்கேற்பாளர்கள் பகிர்ந்து கூறினர். ஒரு பெண், தனது செயற்கை மூட்டு காரணமாக ஏற்படும் வலியைப் போக்க ஒரு ஜோடி ஜெல் மேலுறை வாங்குவதற்கு பத்து மாதங்களாக பணம் சேகரிக்க வேண்டியிருந்ததாக நினைவு கூர்ந்தார். இந்த உதாரணம் அரசு வழங்கும் ஆதரவுக்கும் மாற்றுத்திறனாளியின் உண்மையான வாழ்க்கைச் செலவுக்கும் இடையிலான இடைவெளியை மட்டுமல்லாமல், தேவையான பொருட்களை தாமதமாக அணுகுவது உடல் ரீதியான துன்பத்திற்கும் இயக்கம் குறைவதற்கும் வழிவகுக்கும் என்பதையும் விளக்குகிறது.

இந்த தொடர்பின்மையானது உருவாக்கிய முறைமையில் உதவிகள் போதாதது மட்டுமல்ல குறைபாடுள்ள பெண்களது வாழ்வனுபவங்கள் மீது குறைவாகவே ஒருங்கமைந்ததாகவும் இருக்கின்றது அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்குப் பதிலாக, தற்போதைய உதவி அமைப்பு அவர்களை கடன், சார்பு மற்றும் அசௌகரியத்தின் சுழற்சிகளுக்குள் தள்ளுகிறது. மாற்றுத்திறனாளி பெண்கள் தங்கள் நல்வாழ்வைப் புரிந்து கொள்ளாத அல்லது முன்னுரிமை அளிக்காத ஒரு அதிகாரத்துவத்திடம் தங்கள் தேவைகளை தொடர்ந்து நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

[11] பொலன்னறுவை குழுக்கலந்துரையாடல், 24ஆம் திகதி ஒக்டோபர் 2024

ஒரு பெண் இந்த விரக்தியை இவ்வாறு வெளிப்படுத்தினார்:

*"நாங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் உதவி பெற வேண்டும் என்று சொல்லவில்லை, ஆனால் ஒரு கட்டத்தில் சுதந்திரமாக (சுயாதீனமாக) இருக்க அனுமதிக்கும் ஒன்றைப் பெற வேண்டும், அதன் பிறகு, அவர்கள் உதவி வழங்குவதை நிறுத்தலாம்".* [12]

இந்த அறிக்கை பல மாற்றுத்திறனாளிப் பெண்கள் பகிர்ந்து கொள்ளும் பார்வையை உள்ளடக்கியது, அதாவது அரச ஆதரவு காலவரையற்ற சார்புக்காக வடிவமைக்கப்படக்கூடாது, மாறாக பெண்கள் சுதந்திரம், கண்ணியம் மற்றும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்துடன் வாழக்கூடிய ஒரு நிலைக்கு ஒரு பாலமாகச் செயல்பட வேண்டும்.

[12] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

## பாலியல் இனப்பெருக்க சுகாதார சேவைகளுக்கான (SRHS) வரையறுக்கப்பட்ட அணுகல்

இலங்கையில் மாற்றுத்திறனாளி பெண்கள் பாலியல் இனப்பெருக்க சுகாதார சேவைகளை (SRHS) அணுகுவதில் ஆழமான வேரூன்றிய முறையான தடைகளை எதிர்கொள்கின்றனர், இது களங்கம், அணுக முடியாத தன்மை மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றின் கலவையில் வேரூன்றியுள்ளது. இந்தத் தடைகள் அவர்களின் சுகாதார உரிமையை மட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் சுயாட்சி, கண்ணியம் மற்றும் பாதுகாப்பையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. மற்ற பெண்களைப் போலவே இனப்பெருக்க உரிமைகளும் இருந்தபோதிலும், மாற்றுத்திறனாளிப் பெண்கள் பெரும்பாலும் முக்கிய சேவைகள் மற்றும் தகவல்களிலிருந்து குறிப்பாக குடும்பக் கட்டுப்பாடு, கர்ப்பம் மற்றும் சம்மதம் என்று வரும்போது விலக்கப்படுகிறார்கள். அவர்களின் குறிப்பிட்ட தேவைகள் சுகாதார அமைப்புகளில் அரிதாகவே அங்கீகரிக்கப்படுகின்றன அல்லது கவனிக்கப்படுகின்றன, இதனால் அவர்கள் துஷ்பிரயோகம், வற்புறுத்தல் மற்றும் மோசமான சுகாதார விளைவுகளுக்கு ஆளாக நேரிடும்.

இலங்கையில் மாற்றுத்திறனாளிகளாக உள்ள பெண்கள் பாலியல் இனப்பெருக்க சுகாதார சேவைகளை அணுகுவதில் ஆழமான வேரூன்றிய முறையான தடைகளை எதிர்கொள்கின்றனர், இது களங்கம், அணுக முடியாத தன்மை மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றின் கலவையில் வேரூன்றியுள்ளது. இந்தத் தடைகள் அவர்களின் சுகாதார உரிமையை மட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் சுயாட்சி, கண்ணியம் மற்றும் பாதுகாப்பையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. மற்ற பெண்களைப் போலவே இனப்பெருக்க உரிமைகளையும் கொண்டிருந்தாலும், மாற்றுத்திறனாளிப் பெண்கள் பெரும்பாலும் முக்கிய சேவைகள் மற்றும் தகவல்களிலிருந்து குறிப்பாக குடும்பத் திட்டமிடல், கர்ப்பம் மற்றும் ஒப்புதல் விஷயத்தில் இருந்து விலக்கப்படுகிறார்கள். அவர்களின் குறிப்பிட்ட தேவைகள் சுகாதார அமைப்புகளில் அரிதாகவே அங்கீகரிக்கப்படுகின்றன அல்லது கவனிக்கப்படுகின்றன, இதனால் அவர்கள் துஷ்பிரயோகம், வற்புறுத்தல் மற்றும் மோசமான சுகாதார விளைவுகளுக்கு ஆளாக நேரிடும்.

குழுக் கலந்துரையாடல்களின் போது எழுப்பப்படும் ஒரு நிலையான கவலை, அணுகக்கூடிய மற்றும் உள்ளடக்கிய தகவல் தொடர்பாடல் இல்லாதது ஆகும். உதாரணமாக, செவித்திறன் குறைபாடுள்ள பெண்கள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாதது குறித்து தங்கள் விரக்தி நிலையைப் பகிர்ந்து கொண்டனர். இது மருத்துவர்களுடன் தொடர்புகொள்வதற்கும், நோயறிதல்களைப் புரிந்துகொள்வதற்கும், தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்கும் அவர்களின் திறனைக் கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது. காது கேளாமை உள்ள கர்ப்பிணிப் பெண்கள் பெரும்பாலும் தங்கள் தாய்மார்களுடன் மருத்துவ ஆலோசனையை பெறுகின்றனர். அவற்றை தாய்மார்கள் சரியானதாகவோ அல்லது போதுமானதாகவோ வழங்குவதில்லை, மேலும் மருத்துவர் 30 நிமிடங்களுக்கு விளக்குவதனை அவர்கள் ஐந்து நிமிடங்களில் சுருக்கமாக குறைத்து கூறுகின்றனர் என்பதை ஒரு பெண் விவரித்தார்.

பல மாற்றுத்திறனாளிப் பெண் நோயாளிகள், குறிப்பாக பல குழந்தைகளைக் கொண்டவர்கள், கருத்தடை முறைகள் குறித்த குறைந்த அறிவு தங்களுக்கு இருப்பதாக தெரிவித்தனர். அவர்களின் இனப்பெருக்கத் தேர்வுகள் குறித்து சுதந்திரம் வழங்கப்படுவதற்குப் பதிலாக, குடும்பக் கட்டுப்பாடு பற்றிய உரையாடல்களின் போது அவர்கள் அடிக்கடி புறக்கணிக்கப்படுகிறார்கள். தங்கள் வீடுகளுக்குச் செல்லும் மருத்துவச்சிகள் பெரும்பாலும் தங்கள் தாய்மார்களிடம் மட்டுமே பேசுவார்கள், இதனால் தேவையான அத்தியாவசிய அறிவை அவர்களுக்குத் தராமல் விடுவார்கள். சில சந்தர்ப்பங்களில், பிரசவத்திற்குப் பிறகு கருத்தடை ஊசிகள், அவற்றின் நோக்கம் அல்லது சாத்தியமான பக்க விளைவுகள் பற்றிய எந்த விளக்கமும் இல்லாமல் வழங்கப்பட்டதாக பெண்கள் தெரிவித்தனர்.

சுகாதார வசதிகளில் ஆதரவு மற்றும் அணுகல் இல்லாமை உட்பட கர்ப்பம் மற்றும் பிரசவத்தின் போது ஏற்படும் சவால்கள் பொதுவானவை. மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்கள், பிரசவத்தின்போது தங்களுக்கு விருப்பமான ஒரு துணை நபரை உடனிருக்க அனுமதிக்க மறுக்கப்படுவதாக விவரித்தனர். வவுனியாவைச் சேர்ந்த இயக்கக் குறைபாடுள்ள ஒரு பெண், தனது செயற்கைக் காலால் ஏற்பட்ட வலியையும், மருத்துவ ஊழியர்கள் தனது செயற்கைக் காலைத் தவறாகக் கையாண்டதால் ஏற்பட்ட காயங்களையும் மீறி பிரசவத்தின்போது நடக்க வேண்டிய

கட்டாயம் ஏற்பட்டதாக விவரித்தார். தனது அனுபவத்தைப் பற்றி அவர் வலியுறுத்துகையில்,

*''கர்ப்பிணியாக இருக்கும் மாற்றுத்திறனாளிப் பெண்களை மற்ற பெண்களைப் போலவே நடத்த முடியாது, நமது குறைபாடுகளுக்கு விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்''* என்று கூறினார்.[13]

சுகாதார நிபுணர்களின் எதிர்மறையான அணுகுமுறைகள் இந்த சிரமங்களை மேலும் அதிகரிக்கின்றன. கண்டியில் ஒரு குழுக் கலந்துரையாடலின் போது, பார்வைக் குறைபாடுள்ள ஒரு பெண், பிரசவத்திற்குப் பிறகு, தன்னை கவனித்துக் கொள்ளும் திறனை *''நிருபிப்பதற்கான'' ஒரு வழியாக செவிலியர்கள் தங்கள் முன் தனது சானிட்டரி நாப்கினை மாற்றும்படி கட்டாயப்படுத்தியதாகப் பகிர்ந்து கொண்டார், ''எனக்கு வேறு வழியில்லை என்பதால்தான் நான் அதைச் செய்தேன்''* என்று கூறினார். இந்த சம்பவத்தைப் பற்றி யோசித்து, *''எந்தவொரு உணர்திறன் இல்லாதவர்களும் எவ்வாறு செவிலியர்களாக மாற முடியும் என்று நான் கேள்வி எழுப்புகிறேன்''* என்று மேலும் கூறினார்.[14] இது சுகாதார நிபுணர்களின் தொழில் நெறிமுறை பற்றாக்குறையை தெளிவாக விளக்குவதோடு, இந்த அனுபவங்கள், மாற்றுத்திறனாளிப் பெண்கள் தகுதியற்ற தாய்மார்களாகக் கருதப்பட்டு அடிப்படை மரியாதை மறுக்கப்படும் ஒரு பரந்த அவநம்பிக்கை கலாச்சாரத்தையும் சுட்டிக்காட்டுகின்றன.

சுகாதார உள்கட்டமைப்பும் மிகவும் மோசமாக போதுமானதாக இல்லை. பெரும்பாலான மருத்துவமனைகளில் சாய்வுதளங்கள், சரிசெய்யக்கூடிய படுக்கைகள் மற்றும் விசாலமான கழிப்பறைகள் இல்லாததால், இயக்கக் குறைபாடுள்ள பெண்களுக்கு, குறிப்பாக பிரசவத்தின் போது, அவை கடினமாகவோ அல்லது ஆபத்தானதாகவோ ஆக்குகின்றன. இத்தகைய உடல் ரீதியான தடைகள், சுகாதார நிபுணர்களின் அணுகுமுறைகளுடன் இணைந்து, அணுகல் என்பது ஒரு பின் சிந்தனையாகக் கருதப்படும் ஒரு அமைப்பை சித்தரிக்கிறது.

[13] வவுனியா குழுக்கலந்துரையாடல், 7ஆம் திகதி நவம்பர் 2024

[14] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

பங்கேற்பாளர்கள் சுகாதார நிபுணர்களால் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிகழ்வுகளையும் தெரிவித்தனர். ஒரு பெண், பாலியல் சுகாதார ஆலோசனையைப் பெறும்போது ஒரு மருத்துவரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக விவரித்தார், குறிப்பாக

*"நம் கால்களில் உணர்வு இல்லையென்றால், ஒரு மருத்துவர் நம்மை அறியாமலேயே தகாத முறையில் தொடக்கூடும். நம் தாய்மார்கள் அவ்விடத்தில் இருந்தாலும், குற்றவாளி ஒரு மருத்துவராகவோ அல்லது ஆயுர்வேத மருத்துவராகவோ இருந்தால் அவர்கள் மேல் எந்தத் தவறும் உணராமல் இருக்கலாம்"* என்று கூறுகிறது.[15]

மற்றவர்கள் வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் என்ற போர்வையில் பொருத்தமற்ற தொடுதலின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அதிகார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அணுகக்கூடிய புகார் வழிமுறைகள் இல்லாததால் பெரும்பாலும் செயல்படுத்தப்படும் இந்த மீறல்கள், சுகாதாரத் துறையில் பாலினம் மற்றும் இயலாமை உணர்திறன் பயிற்சிக்கான அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகின்றன. மேலும் அவர்கள் பயம் மற்றும் அவநம்பிக்கை நிறைந்த சூழலை வளர்க்கிறார்கள், இது மாற்றுத்திறனாளிப் பெண்கள் தாங்கள் நம்பியிருக்கும் சுகாதாரப் பராமரிப்பைத் தேடுவதை ஊக்கப்படுத்துவதில்லை, மேலும் இது அவர்களின் ஓரங்கட்டலை மேலும் அதிகரிக்கிறது.

குறிப்பாக அறிவுசார் அல்லது உளவியல் குறைபாடுகள் உள்ளவர்கள், கட்டாய இனப்பெருக்க நடைமுறைகளுக்கும் ஆளாகிறார்கள். பல பங்கேற்பாளர்கள் நீண்டகால பிறப்பு கட்டுப்பாட்டைப் பயன்படுத்த அல்லது குழாய் இணைப்புகள் (LRTs) போன்ற நிரந்தர நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கு பெரும்பாலும் சரியான தகவலறிந்த ஒப்புதல் அல்லது புரிதல் இல்லாமல் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகப் பகிர்ந்து கொண்டனர். சில சந்தர்ப்பங்களில், இந்த முடிவுகள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது சுகாதார வழங்குநர்களால் எடுக்கப்பட்டன. அவர்கள்

[15] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

குழந்தைகளைப் பெறத் தகுதியற்றவர்கள் என்று கருதினர். அறிவுசார் குறைபாடு உள்ள தனது மகள், “நல்ல தொடுதல்’’ மற்றும் “கெட்ட தொடுதல்’’ போன்றவற்றை புரிந்துகொள்ள போராடுவதையும், பெரும்பாலும் அந்நியர்களிடம் வெளிப்படையான பாசத்தைக் காட்டுவதையும் ஒரு தாய் விவரித்தார். இந்த சூழ்நிலைகள் அவளை குறிப்பாக துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்குகின்றன. ஆனால் இந்த அபாயங்களைத் தாண்டிச் செல்வதில் அவளுக்குக் கல்வி அல்லது ஆதரவு குறைவாகவே கிடைக்கிறது.

சமூகக் களங்கம் மற்றும் பாகுபாடு இந்தப் பெண்களை மேலும் தனிமைப்படுத்துகிறது, இதனால் உதவி பெறுவது அல்லது அத்தியாவசிய சேவைகளை அணுகுவது கடினமாகிறது. இந்த ஓரங்கட்டுதல் அவர்களை கட்டாயக் கருத்தடை மற்றும் பாலியல் வன்முறை போன்ற பிரச்சினைகளுக்கு அதிகளவில் பாதிக்கப்படக்கூடியதாக ஆக்குகிறது. அணுகக்கூடிய பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளின் முறையான பற்றாக்குறை மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கான விலக்கு மற்றும் அதிகாரமிழப்பு சுழற்சிகளை நிலைநிறுத்துகிறது.

## மாற்றுத்திறனாளி அடையாள அட்டை இல்லாமை

பல ஆண்டுகளாக, மாற்றுத்திறனாளி அமைப்புகள் மற்றும் ஆர்வலர்கள் இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகளை (ID) வழங்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மாற்றுத்திறனாளி இராணுவ வீரர்கள் தற்போது இராணுவம் மூலம் அத்தகைய அடையாள அட்டைகளைப் பெறுகின்றனர், இதனால் அவர்களுக்கு இலவச மருத்துவ பராமரிப்பு மற்றும் போக்குவரத்து சலுகைகள் கிடைக்கும், இந்த அமைப்பு மாற்றுத்திறனாளிகளின் பரந்த மக்கள்தொகையை, குறிப்பாக பெண்களை விலக்குகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பெண்களுக்கு இந்த மாற்றுத்திறன் அடையாள அட்டை இல்லாமை குறிப்பாக தீங்கு விளைவிக்கும். அவர்களில் பலர் உள்நாட்டுப் போரின் போது (1983–2009) உள் காயங்கள் அல்லது அதிர்ச்சியால் ஏற்பட்ட குறைபாடுகளைப் பெற்றனர். அவர்களின் மாற்றுத்திறனாளி நிலையை சரிபார்க்க ஒரு முறையான வழிமுறை இல்லாமல், பெரும்பாலும் அரசு சார் தரப்பினரிடமிருந்து இந்தப் பெண்கள் அடிக்கடி துன்புறுத்தல், அவநம்பிக்கை மற்றும் ஆக்கிரமிப்புக்கு ஆளாகின்றனர். குழுக் கலந்துரையாடல்களின் போது, சட்ட அமுலாக்க மற்றும் பொது அதிகாரிகளுடன் மீண்டும் மீண்டும் சந்திப்புகள் நடந்ததாகவும், அங்கு அவர்கள் தங்கள் குறைபாடுகளை இழிவான மற்றும் அவமானகரமான வழிகளில் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் பங்கேற்பாளர்கள் விவரித்தனர். சிலர் தங்கள் குறைபாட்டை உடல் ரீதியாக நிரூபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர், மற்றவர்கள் போர் தொடர்பான காயங்களை வெளிப்படுத்த தங்கள் ஆடைகளை இழுக்கவோ அல்லது ஆடைகளை கழற்றவோ கூட சொன்னார்கள், இது அவர்களின் பாதிப்பு மற்றும் அவமானத்தை மேலும் அதிகரிக்கும் செயல்கள் ஆகும்.

சிலர் பொது இடங்களில் தங்கள் குறைபாட்டை உடல் ரீதியாக நிரூபிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர், மற்றவர்கள் போர் தொடர்பான காயங்களை அம்பலப்படுத்த தங்கள் ஆடைகளை இழுக்கவோ அல்லது ஆடைகளை

அவிழ்க்கவோ உத்தரவிடப்பட்டனர். ஆண்களைப் போலல்லாமல், குறைபாடுகள் பெரும்பாலும் “நிரூபிக்கப்படலாம்”, அவை இழிவானவை என்றாலும், பொதுவாக தங்கள் உடல்களை வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை, பெண்கள் தங்கள் கண்ணியத்தை பறித்ததோடு மட்டுமல்லாமல், பாலியல் துன்புறுத்தல்களின் உட்பொருள்களையும் சுமக்கும் மீறல்களுக்கு அடிபணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த நடைமுறை பெண்களின் உடல்கள் எவ்வாறு கட்டுப்பாடு மற்றும் சந்தேகத்தின் தளங்களாக மாறுகின்றன என்பதை பிரதிபலிக்கிறது, இது அவர்களின் ஓரங்கட்டலை ஆழப்படுத்துகிறது.

வடக்கிலிருந்து வந்த ஒரு பெண் கூறியது:

*“எனது மாற்றுத்திறன் தெரியவில்லை என்பதால் மக்கள் என்னைப் பார்த்து என் இயலாமை எங்கே என்று கேட்கிறார்கள். நான் என் ஆடைகளைக் கழற்றி அவர்களுக்கு என் மாற்றுத்திறனைக் காட்ட வேண்டுமா?”.* [16]

இந்த அறிக்கை, கண்ணுக்குத் தெரியாத அல்லது உள் குறைபாடுகள் உள்ள மாற்றுத்திறனாளிப் பெண்களின் பரந்த அனுபவத்தைப் பிரதிபலிக்கிறது, அவர்கள் பெரும்பாலும் ஆழமான மீறல் வழிகளில் ஆதாரச் சுமையைத் தாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இந்தப் பெண்களுக்கு, அரசாங்கத்தால் வழங்கப்படும் மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அதிகாரப்பூர்வ அங்கீகாரமாக மட்டுமல்லாமல், மீண்டும் மீண்டும் இடம் பெறும் பரிசோதனைகள், அவநம்பிக்கை மற்றும் பொது அவமானத்திலிருந்து பாதுகாப்பை வழங்கும் ஒரு கருவியாகவும் செயல்படும்.

இந்த முறையான புறக்கணிப்பின் விளைவுகள் அவமானத்திற்கு அப்பாற்பட்டவை. ஏற்கனவே விதவை, இடப்பெயர்வு மற்றும் பொருளாதார கஷ்டங்கள் போன்ற களங்கங்களைச் சந்தித்து வரும் பல போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, தங்கள் மாற்றுத்திறனை சரிபார்க்க இயலாமை அவர்களின் தனிமை மற்றும் கண்ணுக்குத் தெரியாத தன்மையை அதிகரிக்கிறது. இது சேவைகளுக்கான

[16] மட்டக்களப்பு குழுக்கலந்துரையாடல், 6ஆம் திகதி நவம்பர் 2024

அணுகலை மட்டுமல்ல, பொது வாழ்க்கையில் கண்ணியத்துடன் நகரும் உரிமையையும் அவர்களுக்கு மறுக்கிறது.

இருப்பினும், இந்தத் தேவை நாடு முழுவதும் ஒரே மாதிரியாக உணரப்படவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள பெண்கள் மாற்றுத்திறனாளி அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவது குறித்து அதிக எச்சரிக்கையை வெளிப்படுத்தினர். அத்தகைய அடையாள அட்டை தங்களை மேலும் ஓரங்கட்டி, “வித்தியாசமாக” இருப்பதற்கான கருத்தை வலுப்படுத்தி, பாகுபாட்டிற்கு ஆளாகும் அபாயத்தை அதிகரிக்கும் என்று இந்தப் பெண்கள் அஞ்சினர். மற்றவர்கள், அதாவது அரச சலுகைகளை மோசடியாகப் பெற முயலும் தனிநபர்களால் இந்த அடையாள அட்டை தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்று கவலைப்பட்டனர். இந்த ஏற்றத்தாழ்வு, இலங்கையில் போர் தொடர்பான குறைபாடுகள் உள்ள பெண்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான போராட்டங்களை எடுத்துக்காட்டுகிறது.

துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பைத் தாண்டி, அத்தகைய அடையாள அட்டை வழங்க வேண்டிய நடைமுறை ரீதியான நன்மைகளையும் மாற்றுத்திறனாளிப் பெண்கள் வலியுறுத்தினர். மருத்துவமனைகள் மற்றும் மருத்தகங்களில், மாற்றுத்திறனாளி அடையாள அட்டை முன்னுரிமை அணுகலை வழங்க வேண்டும் என்றும், இது நீண்ட வரிசைகளில் நிற்பதை தவிர்க்க உதவும் என்றும், குறிப்பாக நீண்ட நேரம் நிற்பது உடல் ரீதியாக வேதனையளிக்கும் கண் அழுத்தம் அல்லது இயக்கம் தொடர்பான பிரச்சினைகள் போன்ற நிலைமைகளைக் கொண்டவர்களுக்கு இது மிகவும் முக்கியமானது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

பொதுப் போக்குவரத்தில், பேருந்து ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் ரயில் ஊழியர்களால் அங்கீகாரத்தை உறுதி செய்ய அடையாள அட்டையின் அவசியத்தை பெண்கள் வலியுறுத்தினர். பேருந்துகள் மற்றும் ரயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகள் இருந்தாலும், இவை பெரும்பாலும் மற்றவர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றன, மேலும் மாற்றுத்திறனாளிப் பெண்களின் உதவிக்கான கோரிக்கைகள் அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றன. கட்டாய விழிப்புணர்வு மற்றும் அமுலாக்க நெறிமுறைகளுடன் ஒரு மாற்றுத்திறனாளி அடையாள அட்டை

இணைக்கப்பட்டால், அது எவ்வாறு இந்த அன்றாட தொடர்புகளை மேம்படுத்தி, அவமானங்களைக் குறைக்கும் என்பதை இந்தப் பெண்கள் வலியுறுத்தினர்.

## அணுகக்கூடிய சுகாதார சேவைகள் இல்லாமை

மாற்றுத்திறனாளிப் பெண்ககளைப் பொறுத்தவரை, பாதுகாப்பான, சுகாதாரமான மற்றும் தனியார் சுகாதாரத்திற்கான அணுகல் என்பது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கண்ணியம் ஆகியவற்றின் முக்கியமான பிரச்சினையாகும். இருப்பினும், இலங்கையில் சுகாதார உள்கட்டமைப்பு WWDயின் குறிப்பிட்ட தேவைகளை தொடர்ந்து கவனிக்கவில்லை, தனிப்பட்ட சுகாதாரத்தை சுயாதீனமாகவும் பாதுகாப்பாகவும் நிர்வகிக்கும் அவர்களின் திறனை கடுமையாக கட்டுப்படுத்துகிறது. மோசமாக வடிவமைக்கப்பட்ட பொது மற்றும் தனியார் கழிப்பறைகள் அவர்களின் தவிர்ப்பை அதிகரிக்கின்றன, அன்றாட சவால்களை சிக்கலாக்குவதோடு கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளை வலுப்படுத்துகின்றன.

இயக்கக் குறைபாடுகள் உள்ள பெண்களுக்கு போதுமான வசதிகள் இல்லாதது குறிப்பாக சவாலானவை. பெரும்பாலான பொது மற்றும் நிறுவன கழிப்பறைகளில் சாய்வுதளங்கள், கைப்பிடிகள், கிராப் பார்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் அல்லது உதவி சாதனங்களை இடமளிக்கக்கூடிய விசாலமான உட்புறங்கள் போன்ற அத்தியாவசிய அம்சங்கள் இல்லை. கழிப்பறைகள் “அணுகக்கூடியவை” என்று குறிக்கப்பட்டாலும், வடிவமைப்பு குறைபாடுகள் அல்லது மோசமான பராமரிப்பு காரணமாக அவை பெரும்பாலும் உண்மையான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறிவிடுகின்றன. உணர்வுக் குறைபாடுகள் உள்ள பெண்கள் தொட்டுணரக்கூடிய குறிகாட்டிகள், ஒலிக் குறிப்புகள் அல்லது சரியான அடையாளங்கள் இல்லாததால் கூடுதல் தடைகளை எதிர்கொள்கின்றனர், இது குழப்பம், அசௌகரியம் மற்றும் அடிப்படை சுகாதாரத்தை நிர்வகிப்பதில் சுதந்திரத்தை இழக்க வழிவகுக்கிறது.

பொதுச் சுகாதார உள்கட்டமைப்பு, மாற்றுத்திறனாளி பெண்களின் பல்வேறு தேவைகளை அரிதாகவே கருத்தில் கொள்கிறது என்றும் பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டனர். உதாரணமாக, அரசு கட்டிடங்கள் மற்றும் மருத்துவமனைகளில் உள்ள குந்து கழிப்பறைகள் அணுக முடியாதவை மட்டுமல்ல, ஆதரவு இல்லாமல் பயன்படுத்துவது பெரும்பாலும் ஆபத்தானவை. வசதிகள் இருந்தாலும், அவற்றின் பராமரிப்பு சீரற்றதாக உள்ளது, மேலும் பூட்டப்பட்ட கழிப்பறைகள், உடைந்த

கதவுகள் மற்றும் காணாமல் போன பூட்டுகள் அவற்றைப் பயன்படுத்த முடியாததாக ஆக்குகின்றன

கிராமப்புறங்களில் நிலைமை பெரும்பாலும் மோசமாக உள்ளது, அங்கு வீட்டு கழிப்பறைகள் பொதுவாக பிரதான வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் கட்டப்படுகின்றன. குறிப்பாக இயக்க அல்லது புலன் குறைபாடுகள் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு, இந்த தூரம் உடல் மற்றும் பாதுகாப்பு சவால்களை முன்வைக்கிறது தெருவிளக்குகள் இல்லாத பகுதிகளில் இந்த வெளிப்புற வீட்டு கழிப்பறைகளைப் பயன்படுத்துவது எவ்வாறு பாதுகாப்பற்றது என்பதை செவித்திறன் குறைபாடுள்ள ஒரு பெண் விளக்கினார். ஏனெனில் யானைகள் அல்லது தாக்குதல் நடத்துபவர்களால் வரும் ஆபத்துக்களை அவர்களால் கேட்க முடியாது, உதவிக்காக கத்தவும் முடியாது. இதன் விளைவாக, பல பெண்கள் தங்கள் கணவர்கள் அல்லது வேறு ஆண் உறவினருடன் கழிப்பறைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும், இது அவர்களின் தனியுரிமை மற்றும் கண்ணியத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு சார்புநிலை என்றும் கூறினர்.

ஆபத்துகள் இருந்தபோதிலும், இந்த பெண்களில் பெரும்பாலோர் வீட்டில் அணுகக்கூடிய கழிப்பறைகளைக் கட்ட முடியாது. குறிப்பாக ஏற்கனவே வறுமை மற்றும் அரச ஆதரவு மட்டுப்படுத்தப்பட்டுள்ள வீடுகளுக்கு, இத்தகைய வசதிகள் விலை உயர்ந்தவை. இதன் விளைவாக, அவர்கள் தற்காலிக அல்லது பகிரப்பட்ட விருப்பங்களைத் தொடர்ந்து நம்பியுள்ளனர், தனியுரிமை, கண்ணியம் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பை மேலும் சமரசம் செய்கிறார்கள்.

பணியிடங்களில், அணுகக்கூடிய வசதிகள் இல்லாதது அன்றாட அவமானங்களையும் சுகாதார அபாயங்களையும் உருவாக்குகிறது. கொழும்பைச் சேர்ந்த இயக்கக் குறைபாடுள்ள ஒரு பெண், அரசாங்க அலுவலக கட்டடத்தில் பணிபுரியும் இவர், ஒன்பது மாடி வளாகத்தில் ஒரே ஒரு கழிப்பறை மட்டுமே உள்ளது என்றும், அது எப்போதும் பூட்டியே வைக்கப்பட்டுள்ளது என்றும் பகிர்ந்து கூறினார். இதன் விளைவாக, ஒவ்வொரு முறையும் அதைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் போது இரண்டு தளங்கள் கீழே பயணிக்க வேண்டியிருக்கும். இது நேரத்தையும் சக்தியையும் எடுத்துக்கொள்கின்றது. அதே நேரத்தில் அது அவர் ஒதுக்கப்பட்டிருக்கிறார் என்ற

உணர்வை வலுப்படுத்துகிறது. ஏனெனில் அவரது சக ஊழியர்கள் அத்தகைய தடைகளை எதிர்கொள்ளவில்லை. கொழும்பு மற்றும் கண்டி FGDகளின் போது இதே போன்ற விவரிப்புகள் வெளிவந்தன, அங்கு அலுவலக கட்டடங்கள் மற்றும் பிற பொது இடங்களில் அணுகக்கூடிய குளியலறைகள் வழக்கமாக சேமிப்பு அறைகளாகக் கருதப்பட்டு, பூட்டி வைக்கப்படுகின்றன. எனவே அவை பயன்படுத்த முடியாதவை என்று பெண்கள் விளக்கினர். இங்கு அணுகக்கூடிய குளியலறைகள் உள்ளன. ஆனால் அணுக முடியாதவையாகவே உள்ளன என்பது குறியீட்டு இணக்கத்தின் ஒரு வடிவத்தை எடுத்துக்காட்டுகிறது. அங்கு அணுகல் பெயரளவில் வழங்கப்படுகிறது. ஆனால் நடைமுறையில் மறுக்கப்படுகிறது. WWDகள் முதலில் இருக்கக்கூடாத தடைகளைத் தாண்டிச் செல்ல விட்டுவிடுகிறது. இந்த வசதிகள் பூட்டியே வைக்கப்பட்டுள்ளதால், ஒவ்வொரு முறையும் சாவியைக் கேட்டுச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் உள்ளனர். மேலும் அவர்கள் கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டும் என்று சக ஊழியர்கள் அல்லது மேற்பார்வையாளர்களிடம் திறம்பட அறிவிக்க வேண்டியுள்ளது என்று பெண்கள் மேலும் விளக்கினர். ஒரு பங்கேற்பாளர் குறிப்பிட்டது போல, இது மாற்றுத்திறன் அல்லாத பெண்கள் ஒருபோதும் அனுபவிக்காத அவமானம் ஆகும். ஏனெனில் அவர்கள் தேவை ஏற்படும் போதெல்லாம் கழிப்பறைகளை சுதந்திரமாகவும் தனிப்பட்ட முறையிலும் பயன்படுத்தலாம். இந்த நிலைமைகள் பெண்கள் தங்கள் நடத்தையை மாற்றவும், கழிப்பறை கிடைப்பதைச் சுற்றி வெளியே செல்லவும், திரவ உட்கொள்ளலைக் குறைக்கவும், தீவிர நிகழ்வுகளில், நாள் முழுவதும் ஒரே சானிட்டரி நாப்கின் அணியவும் கட்டாயப்படுத்துகின்றன. கண்டியில் இருந்து இயக்கக் குறைபாடு கொண்ட ஒரு பங்கேற்பாளர் இவ்வாறு கூறினார்:

*''நான் வேலையில் கழிப்பறையைப் பயன்படுத்த முடியாது. எனவே, நான் வேலைக்குச் செல்லும் நாட்களில், நான் செல்வதற்கு முன்பு வீட்டில் உள்ள கழிப்பறையைப் பயன்படுத்துகிறேன், எனக்கு மாதவிடாய் இருக்கும்போது, வேலை நாளில் என் நப்கினை மாற்ற முடியாது''.*[17]

[17] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

இத்தகைய நடைமுறைகள் கண்ணியத்தை சமரசம் செய்வது மட்டுமல்லாமல், சிறுநீர்ப் பாதை நோய்த்தொற்றுகள், தோல் தடிப்புகள் மற்றும் பிற கடுமையான சுகாதார பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும்.

அணுகக்கூடிய சுகாதார வசதிகள் இல்லாதது, மாற்றுத்திறனாளி சிறுமிகளிடையே பாடசாலை இடைவிலகல் வீத அதிகரிப்பிற்கு ஒரு முக்கிய காரணியாகும். மாற்றுத்திறனாளி பெண்கள் இதை மேலும் விரிவாகக் கூறினர். அவர்கள், அணுகக்கூடிய கழிப்பறைகள் இல்லாமல் மாதவிடாயை நிர்வகிக்க முடியாததால் பருவமடைந்த பிறகு பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திய மாற்றுத்திறனாளி பெண்கள் பற்றிய கதைகளைப் பகிர்ந்து கொண்டனர். இந்தக் விவரிப்புகள், உடல் உள்கட்டமைப்பு பெண்களின் உடல்நலம், இயக்கம் மற்றும் சுதந்திரத்தை எவ்வாறு சமரசம் செய்கிறது, பெரும்பாலும் அவர்களை வீடுகளுக்குள் அடைத்து வைக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இது கல்வியிலிருந்தும், பின்னர் வேலையிலிருந்தும் விலக்கப்படும் சுழற்சியை உருவாக்குவதோடு, குடும்ப உறுப்பினர்கள் அல்லது வாழ்க்கைத் துணைவர்களைச் சார்ந்திருப்பதை வலுப்படுத்துகிறது.

## அணுகக்கூடிய தொழிற்கல்வி பயிற்சித் திட்டங்களிலிருந்து விலக்கு

பெரும்பாலும் முறையான கல்வி மற்றும் பணியிடங்களிலிருந்து விலக்கப்படுகின்ற மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு தொழிற் பயிற்சி பெரும்பாலும் வேலைவாய்ப்புக்கான மாற்றுப் பாதையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், குழுக் கலந்துரையாடல்களின் போது, மாற்றுத்திறனாளிப் பெண்கள் தொழிற்கல்வி பயிற்சியை அணுகுவதில் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொண்டது தொடர்ந்தும் எடுத்துக்காட்டப்பட்டது. பல பயிற்சித் திட்டங்கள் காலாவதியானவை, வேலை சந்தை தேவைகளுடன் தவறாக இணைக்கப்பட்டுள்ளன. மேலும் அவை தையல் மற்றும் கைவினைப்பொருட்கள் போன்ற பாரம்பரிய திறன்களில் கவனம் செலுத்துகின்றன, வருவாய் திறனைக் கட்டுப்படுத்துகின்றன மற்றும் பெண்களின் பாத்திரங்கள் பற்றிய ஒரே மாதிரியான கருத்துக்களை வலுப்படுத்துகின்றன. உதாரணமாக, கொழும்பைச் சேர்ந்த பெண்கள் பனை இலைகளுடன் வேலை செய்வதில் பயிற்சி பெற்றதாக தெரிவித்தனர். இந்தப் பொருள் இங்கு கிடைக்காததால் அவர்களின் பிரதேசத்தில் இது பொருத்தமற்ற ஒரு திறமையாகும் எனக் குறிப்பிட்டனர்.

மேலும் இது காலாவதியானதாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தொழில் பயிற்சி திட்டங்கள் நிறுவன ரீதியாக விலக்களிக்கப்படும் கடுமையான தகுதி அளவுகோல்களால் நிர்வகிக்கப்படுகின்றன. சமூக சேவைகள் துறை விதிமுறைகளின்படி, விண்ணப்பதாரர்கள் 16 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களாகவும், திருமணமாகாதவர்களாகவும், “சுயாதீனமானவர்கள்” மற்றும் “பயிற்சி பெறக்கூடிய நிலை” (அறிவுறுத்தல்களைப் புரிந்துகொள்ளவும், மனப்பாடம் செய்யவும், பெற்றோரின் பராமரிப்பிலிருந்து விலகி செயல்படவும் முடியும்) என சான்றளிக்கப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். இந்தத் தேவைகள், பயிற்சியிலிருந்து அதிகம் பயனடையும் அதிக எண்ணிக்கையிலான WWD-களை முறையாகத் தகுதி நீக்கம் செய்கின்றன.[18] [19]

---

[18] ஆதாரம்:https://www.socialservices.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=22&Itemid=131&lang=en (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 08/09/2025)

[19] ஆதாரம்: https://www.socialservices.gov.lk/web/images/Application_Vocational_Training/Circular_English.pdf (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 08/09/2025)

FGD-களின் போது, குறிப்பாக வயதுவந்த காலத்தில் குறைபாடுகள் ஏற்பட்ட பெண்களால், வயது வரம்பு மீண்டும் மீண்டும் உயர்த்தப்பட்டது. கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண், வாழ்க்கையின் பிற்பகுதியில் இயக்கம் குறைபாடுடையவராக மாறியதால், 35 வயது வரம்பைத் தாண்டியதால் பயிற்சியிலிருந்து தடை செய்யப்பட்டதனால் ஏற்பட்ட விரக்தியை வெளிப்படுத்தினார்,

*"நாங்கள் கற்றுக்கொள்ள ஆர்வமாக இருந்தால், அரசாங்கம் ஏன் எங்கள் வயதின் அடிப்படையில் எங்களை கட்டுப்படுத்த வேண்டும்?"*[20] என்று கேள்வி கேட்டார்.

தன்னிச்சையான வயது வரம்புகளை அமல்படுத்துவதன் மூலம், இந்த அமைப்பு பெண்கள் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளவும் நிதி சுதந்திரத்தை மீண்டும் பெறவும் வாய்ப்பளிக்காது.

திருமண நிலைத் தேவை சமமாக விலக்கு அளிக்கப்படுகிறது, ஏனெனில் சில குடியிருப்பு பயிற்சி திட்டங்கள் திருமணமான பெண்களை திட்டவட்டமாக நிராகரிக்கின்றன. இந்த விதி, பங்கேற்பாளர்கள் உதவியின்றி அன்றாட வாழ்க்கையை நிர்வகிக்கவும், வீட்டை விட்டு வெளியே வாழவும் கோரும் "சுதந்திரம்" தேவையுடன் இணைந்து, மிகவும் சுதந்திரமான, திருமணமாகாத பெண்கள் மட்டுமே பயிற்சிக்கு "தகுதியானவர்கள்" என்று கருதப்படும் ஒரு முரண்பாட்டை உருவாக்குகிறது. பல பெண்கள் சுட்டிக்காட்டியபடி, தொழில் பயிற்சி அதிகம் தேவைப்படுபவர்கள் இந்த நிலைமைகளால் விலக்கப்பட்டவர்கள். இந்த முறையான கட்டுப்பாடுகளுக்கு அப்பால், பயிற்சி மையங்களுக்குள் உள்ள முறையான தடைகள் விலக்கலை வலுப்படுத்துகின்றன. பல மையங்கள் உடல் ரீதியாக அணுக முடியாதவை, சாய்வுதளங்கள் மற்றும் அணுகக்கூடிய கழிப்பறைகள் இல்லாதவை, அதே நேரத்தில் திட்ட விதிகள் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யத் தவறிவிடுகின்றன.

அறிவுசார் குறைபாடுள்ள ஒரு பெண்ணின் தாய், தனது மகளுக்கு அடிக்கடி கழிப்பறை இடைவெளி தேவைப்பட்டதால் பங்கேற்க முடியவில்லை என்பதை விவரித்தார். இந்த

[20] கொழும்பு குழுக்கலந்துரையாடல், 10ஆம் திகதி ஒக்டோபர் 2024

திட்டம் பொருத்தப்படவில்லை அல்லது இடமளிக்க விரும்பவில்லை. உண்மையில், அறிவுசார் குறைபாடுகள் உள்ள பெண்களுக்காக குறிப்பாக வடிவமைக்கப்பட்ட தொழில் பயிற்சி தெரிவுகள் எதுவும் இல்லை.

உள்ளடக்கிய இடங்களை வடிவமைப்பதற்கு பதிலாக, பல மையங்கள் பங்கேற்பாளர்களை மிகவும் "சார்புடையவர்கள்" அல்லது ஆதரவு தேவை என்று கருதி வழக்கமாக வெளியேற்றுகின்றன. அதே நேரத்தில், அன்றாட வாழ்க்கையில் பங்கேற்க உதவுவதற்காக பலர் பெண் உறவினர்களை நம்பியிருந்தாலும், உறவினர்கள் அவர்களுடன் வருவதைத் தடை செய்கின்றன. ஒரு பங்கேற்பாளர் கவனித்தபடி, இத்தகைய நடைமுறைகள் நம்பத்தகாத சுதந்திரத் தரத்தை எடுத்துக்கொள்கின்றன

*"அவர்கள் மாற்றுத்திறனாளிகளாக தோன்றாத மாற்றுத்திறனாளிப் பெண்களை மட்டுமே விரும்புகிறார்கள்".* [21]

மற்றொரு விதிவிலக்கான நடைமுறை என்னவென்றால், பல WWD-களுக்கு ஒருபோதும் பெற வாய்ப்பு இல்லாத கல்வித் தகுதிகளுக்கான தேவை. சமூக சேவைகள் துறையின் இணையதளத்தில் பகிரங்கமாக பட்டியலிடப்படவில்லை என்றாலும், சில தொழிற்கல்வித் திட்டங்கள் சாதாரண தர அல்லது உயர் தர கல்வித் தகுதிகளைக் கூட கோருவதாக பெண்கள் தெரிவித்தனர்.

*"முதலில் பள்ளிக் கல்வி முறையை சரிசெய்யாமல் இந்த மையங்கள் A/Lநிலைத் தகுதிகளை எவ்வாறு கேட்க முடியும்?".* [22] *என ஒரு பங்கேற்பாளர் கேட்டார்.*

இத்தகைய தேவைகள், மாற்றுத்திறனாளி பெண்கள் தரமான ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிக்கான அணுகலை மறுக்கும் முறையான தடைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறிவிடுகின்றன.

---

[21] பொலன்னறுவை குழுக்கலந்துரையாடல், 24ஆம் திகதி ஒக்டோபர் 2024

[22] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

பயிற்சிக்குப் பிந்தைய ஆதரவு இல்லாதது மற்றொரு குறைபாடாகும். அரசு தொழிற்கல்வியில் முதலீடு செய்தாலும், வேலை வாய்ப்பு உதவி அல்லது முதலாளிகளுடனான இணைப்புகள் போன்ற பின்தொடர்தல் வழிமுறைகளை வழங்குவதில் அது பெரும்பாலும் தோல்வியடைகிறது. இதன் விளைவாக, WWD-களுக்கு சான்றிதழ்கள் மட்டுமே உள்ளன, ஆனால் வேலைவாய்ப்பு இல்லை, இது பயிற்சியை சிறந்த முறையில் அடையாளப்படுத்துகிறது. பல பெண்களுக்கு, குறிப்பாக குறைபாடுகளுடன் பிறந்தவர்களுக்கு, முறையான கல்விக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் இந்த சவால்களை அதிகரிக்கிறது. தொழிற்கல்வி பெரும்பாலும் ஒரு தொழிலை உருவாக்குவதற்கான ஒரே வாய்ப்பாக இருப்பதால், அமைப்பில் உள்ள திறமையின்மை மற்றும் விலக்கு நடைமுறைகள் பெரும்பாலும் பெண்களை வேலைகள் அல்லது நிதி பாதுகாப்பு இல்லாமல் விட்டுவிடுகின்றன, குடும்ப உறுப்பினர்களைச் சார்ந்திருப்பதை வலுப்படுத்துகின்றன மற்றும் அவர்களின் ஓரங்கட்டலை ஆழப்படுத்துகின்றன.

## போதுமான அணுகக்கூடிய உதவி சாதனங்கள் இல்லை

மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு, உதவி சாதனங்கள் உயிர்வாழ்வதற்கும், கண்ணியத்திற்கும், சுதந்திரத்திற்கும் அவசியமான கருவிகள். இருப்பினும், இலங்கையில் அரச சேனல்கள் மூலம் வழங்கப்படும் சாதனங்கள் பெரும்பாலும் மோசமான தரம் மற்றும் வரையறுக்கப்பட்ட செயல்பாட்டைக் கொண்டவை. சக்கர நாற்காலிகள், கேட்கும் கருவிகள், கண்ணாடிகள், செயற்கை கைகால்கள் மற்றும் வெள்ளை பிரம்புகள் போன்ற சாதனங்கள் தனிப்பட்ட மதிப்பீடுகள் இல்லாமல் விநியோகிக்கப்படுகின்றன, மேலும் அவை குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப அரிதாகவே வடிவமைக்கப்படுகின்றன.

அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவி சாதனங்கள் பொதுவாக ஒரே அளவில் இருக்கும், ஆனால் பொருத்தமற்ற அல்லது தரமற்ற உபகரணங்கள் எவ்வாறு சுயாதீனமாக வேலை செய்வதற்கான, பயணிப்பதற்கான அல்லது அடிப்படை பணிகளைச் செய்வதற்கான தங்கள் திறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பெண்கள் பகிர்ந்து கொண்டனர். முதன்மை சாதனத்தைப் பெற்ற பிறகு 5 முதல் 10 ஆண்டுகள் வரை மாற்றுவதற்கான தகுதி கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நீண்ட மாற்று செயல்முறைகள் காரணமாக உடைந்த அல்லது தேவைக்குக் குறைந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதாக பலர் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தேவை மதிப்பீடுகள் இல்லாதது இந்த சவால்களை மேலும் அதிகரிக்கிறது. குறிப்பிட்ட தேவைகளை கருத்தில் கொள்ளாமல் சாதனங்கள் விநியோகிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர்கள் பெரிய அளவிலான சக்கர நாற்காலிகள் போன்ற பொருத்தமற்ற உபகரணங்களைப் பெறுவது, அவற்றை நடைமுறைக்கு சாத்தியமற்றதாக்குவது மற்றும் இந்த கருவிகள் வழங்க விரும்பும் சுயாட்சியை அடைய முடியாமல் போவது போன்ற நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். காது கேட்கும் கருவிகள் பெரும்பாலும் மோசமாக செயல்படுவதாகக் கூறப்பட்டன. அதே நேரத்தில் பார்வை குறைபாடுள்ள பெண்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வெள்ளை பிரம்புகள் உடையக்கூடியவை மற்றும் உடைந்து போகும் வாய்ப்புகள் உள்ளவை என்று விவரிக்கப்பட்டன. ஒரு பெண், ரூபா 163,000 மதிப்புள்ள செயல்பாட்டு காது கேட்கும் கருவியை வாங்க தனது தங்க நகைகளை அடகு

வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பட்டரிகளின் அதிக விலை மேலும் நிதி அழுத்தத்தை அதிகரிக்கிறது.

செயற்கைக் கருவிகள் மற்றொரு சிரமத்தை ஏற்படுத்துகின்றன. செயற்கைக் கால்களுக்கான அளவீடுகள் ஒரு கட்டத்தில் எடுக்கப்படலாம் என்றாலும், சாதனம் ஒரு வருடம் கழித்து மட்டுமே வழங்கப்படலாம் என்று பெண்கள் தெரிவித்தனர். அதற்குள், எடை ஏற்ற இறக்கங்கள், தசைச் சிதைவு அல்லது புதிய காயங்கள் மூட்டுகளை சங்கடமாகவோ அல்லது பயன்படுத்த முடியாததாகவோ மாற்றக்கூடும். பொருத்தம் அல்லது பயன்பாட்டினைப் பொருட்படுத்தாமல், செயற்கைக் உறுப்புகளை மாற்றீடு செய்வது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன, இதனால் பலர் அமைதியாக அவதிப்படுகிறார்கள்.

மின்சார சக்கர நாற்காலிகளும் மறைமுகமான செலவுகளுடன் வருகின்றன. ஆரம்ப சாதனம் அரசு அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படலாம் என்றாலும், தேய்ந்து போன பாகங்கள் அல்லது பட்டரிகளை மாற்றுவதற்கான பொறுப்பு முற்றிலும் தனிநபரின் மீது விழுகிறது. தேய்ந்து போன உபகரணங்களைப் பராமரிப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ ஒரு முறையான வழிமுறை இல்லாததால், பெண்கள் முக்கியமான ஆதரவை இழக்க நேரிடுகிறது, மேலும் பெரும்பாலும் அவர்கள் குடும்ப உறுப்பினர்களை நம்பியிருக்கவோ அல்லது அவர்களின் இயக்கத்தை முற்றிலுமாக கட்டுப்படுத்தவோ கட்டாயப்படுத்துகிறார்கள். இதனால் இந்த சாதனங்கள் நீண்டகால தீர்வாக இல்லாமல் தற்காலிக நிவாரணமாகின்றன.

வடிகுழாய்கள் மற்றும் வயது வந்தோருக்கான டயப்பர்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான அதிக வரிகள் மாற்றுத்திறனாளிப் பெண் நோயாளிகளின் மீது மேலும் நிதிச் சுமையை ஏற்படுத்துகின்றன. இது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை கணிசமாக பாதிக்கிறது. இந்த பொருட்கள் சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் கண்ணியத்தைப் பேணுவதற்கு மிக முக்கியமானவை. ஆனால் அவற்றின் அதிக விலை பெரும்பாலும் பெண்கள் அவற்றை பகிர்ந்து பயன்படுத்தவோ அல்லது முற்றிலுமாக கைவிடவோ கட்டாயப்படுத்துகிறது. இது கடுமையான உடல்நல விளைவுகளுக்கு வழிவகுக்கும், இது அவர்களின் இயக்கம் மற்றும் சுதந்திரத்தை மேலும் கட்டுப்படுத்தக்கூடும். தற்போது, இலங்கையின் வயதுவந்தவர்களுக்கான

டயப்பர்கள் வரிகளின் கலவைக்கு உட்படுத்தப்படுகின்றன, இதன் விளைவாக மொத்த வரிச் சுமை சுமார் 52% ஆகும்,[23] [24] இது பல மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு ஒரு நாளைக்கு ஐந்து டயப்பர்களுக்கு மேல் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு குறிப்பாக அதிக சுமையாக உள்ளது. இயக்கக் குறைபாடுள்ள ஒரு பெண், மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கான வடிகுழாய்கள் மற்றும் டயப்பர்களை விநியோகிக்க வேண்டும் என்று வாதிட்டபோது, ஒரு நலவாழ்வு அமைச்சு அதிகாரி வடிகுழாய்கள் மற்றும் டயப்பர்களை தினமும் பயன்படுத்த வேண்டுமா? என்று கேள்வி எழுப்பினார். இந்த சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த அவர்,

*“முதுகெலும்பு காயங்கள் உள்ள சில பெண்கள் தங்கள் அடிப்படை கண்ணியம் மற்றும் ஆரோக்கியத்திற்காக தினமும் இந்த பொருட்களை நம்பியிருக்கிறார்கள் என்பதை தனது நிலையில் உள்ள ஒருவர் எப்படி அறியாமல் இருக்க முடியும்? இதை ஒரு அரசாங்க அதிகாரிக்கு விளக்க வேண்டியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது”* என்று கேள்வி எழுப்பினார்.[25]

பயன்படுத்தப்பட்ட அல்லது உடைந்த சாதனங்களுக்கு முறையான மறுசுழற்சி அல்லது திருப்பி அனுப்பும் அமைப்பு இல்லாததையும் பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டனர். *“என் சக்கர நாற்காலி உடைந்தால”*, *“அதை நான் திருப்பிக் கொடுக்கவோ அல்லது மாற்றவோ எங்கும் இடமில்லை. நான் அதை தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் அல்லது நானே ஒரு புதியதை வாங்க வேண்டும்”.*[26] என ஒரு பெண் விளக்கினார். இந்த முறையான ஆதரவு இல்லாதது மாற்றுத்திறனாளிப் பெண்களை சார்பு மற்றும் அசௌகரியத்தின் சுழற்சிகளில் சிக்க வைக்கிறது.

---

[23] இலங்கையில், வயது வந்தோருக்கான டயப்பர்கள் 20% சுங்க வரி, 18% மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT), 10% துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரி (PAL), 10% Cess மற்றும் 2.5% Excise வரி (S.P.D.) ஆகியவற்றிற்கு உட்பட்டவை.

[24] ஆதாரம்: https://www.customs.gov.lk/wp-content/uploads/2025/06/Tariff%202022%20Chapter%20-%2096%20Final.pdf (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 27/08/2025)

[25] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

[26] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

பல பெண்களுக்கு, இந்தத் சாதனங்களை வாங்க இயலாமை அவமானம் மற்றும் தனிமை உணர்வுகளை அதிகரிக்கிறது. இதனால் சமூக, கல்வி அல்லது தொழில்முறை நடவடிக்கைகளில் பங்கேற்பது இன்னும் கடினமாகிறது. இந்த சாதனங்களின் போதாமை உடல் இயக்கத்தை மட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், உதவி தொழில்நுட்பங்கள் பயனரின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக வேண்டிய அத்தியாவசிய கருவிகளாகக் கருதப்படுவதற்குப் பதிலாக ஒரு முறை கையேடுகளாகக் கருதப்படும் ஒரு பரந்த நிறுவன புறக்கணிப்பையும் குறிக்கிறது.

## அணுகக்கூடிய கல்விக்கான வரையறுக்கப்பட்ட அணுகல்

இலங்கையில் மாற்றுத்திறனாளிப் பெண்கள், சிறுவயது முதல் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வரை கல்வியை அணுகுவதில் குறிப்பிடத்தக்க மற்றும் பன்முகத் தடைகளை எதிர்கொள்கின்றனர். இந்தத் தடைகள், திறன் சார்ந்த மனப்பான்மைகள், அணுகக்கூடிய உள்கட்டமைப்பு இல்லாமை, வரையறுக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி, மோசமாக செயல்படுத்தப்பட்ட உள்ளடக்கிய கல்விக் கொள்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிப் பெண்கள் கல்வியை மதிப்பிடுவதில் முறையான தோல்வி ஆகியவற்றில் வேரூன்றியுள்ளன.

குழுக் கலந்துரையாடல்களின் போது, பங்கேற்பாளர்கள், குறிப்பாக கிராமப்புறங்களில், குறைபாடுகள் உள்ள பெண்களுக்கு கல்வி தேவையில்லை என்ற பரவலான சமூக நம்பிக்கையை தொடர்ந்து எடுத்துரைத்தனர். இதன் விளைவாக, மாற்றுத்திறனாளிப் பெண்கள் பெரும்பாலும் வீட்டிலேயே வைக்கப்பட்டு, பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பு மறுக்கப்படுகிறார்கள். குடும்பங்கள் ஆதரவாக இருந்தாலும், அருகிலுள்ள அணுகக்கூடிய பாடசாலைகள் இல்லாதது போன்ற நிறுவனத் தடைகளை எதிர்கொள்கின்றனர். பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில், குறைபாடுகள் உள்ள குழந்தைகள் பெரும்பாலும் கல்வி வாய்ப்புகள் இல்லாமல் விடப்படுவதாக பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். இது தனிமைப்படுத்தலின் சுழற்சிகளை மேலும் வலுப்படுத்துகிறது. பலரை முறையான பாடசாலைப்படிப்பு இல்லாமல் வளர கட்டாயப்படுத்துகிறது மற்றும் கல்வியறிவின்மை மற்றும் தனிமையின் சுழற்சிகளை வலுப்படுத்துகிறது.

இந்த நிலைமை தேசிய புள்ளிவிவரங்களில் மேலும் பிரதிபலிக்கிறது, அங்கு 2012 மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பின்படி, செயல்பாட்டு சிரமங்களைக் கொண்ட 95.7% (சுமார் 1.55 மில்லியன்) நபர்கள் எந்தவொரு கல்வி நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை, அதே நேரத்தில் 3.4% (சுமார் 54,000) மட்டுமே பாடசாலைக்குச் செல்கின்றனர்.[27] இருப்பினும், இந்த புள்ளிவிவரங்கள் இப்போது

[27] ஆதாரம: https://unstats.un.org/unsd/demographic-social/meetings/2016/bangkok--disability-measurement-and-statistics/Session-6/Sri%20Lanka.pdf (கடைசியாக அணுகப்பட்ட தேதி : 25/08/2025)

ஒரு தசாப்தத்திற்கும் மேலானவை, எனவே தற்போதைய நிலைமை குறித்த வரையறுக்கப்பட்ட மற்றும் காலாவதியான படத்தை மட்டுமே வழங்குகின்றன. அவர்கள் பாலினத்தால் பிரிக்கப்படவில்லை, இதனால் எத்தனை மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமிகள் கல்வி முறையிலிருந்து விடுபட்டுள்ளனர் என்பதை தீர்மானிக்க இயலாது.

கல்வி முறைமை, மாற்றுத்திறனாளி மாணவர்களை சிறப்புப் பாடசாலைகள் அல்லது பிரதான பாடசாலைகளுக்குள் உள்ள பிரிவு களாகப் பிரித்து வைப்பதைத் தொடர்கிறது. இது சலமன்கா அறிக்கையின் கீழ் உள்ளடக்கிய கல்விக்கான இலங்கையின் உறுதிப்பாட்டிற்கு முரணான ஒரு நடைமுறையாகும்.[28] 1994 ஆம் ஆண்டு அறிக்கையில் கையெழுத்திட்டு, மாற்றுத்திறனாளி சிறுவர்களை வழக்கமான பாடசாலைகளில் ஒருங்கிணைப்பதாக உறுதியளித்த போதிலும், தற்போதைய அணுகுமுறை அவர்களைத் தனிமைப்படுத்தி வருகிறது. இது அனைத்து குறைபாடுகளையும் ஒன்றாக இணைக்கும் ஒரு ஒத்திசைவான கொள்கையின் காரணமாகும். இது அறிவுசார், உடல் மற்றும் புலன் குறைபாடுகளுக்கு இடையில் வேறுபடுத்திப் பார்க்கத் தவறிவிட்டது. இதன் விளைவாக, உடல் குறைபாடுகள் உள்ள சிறுவர்கள் மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள் அல்லது கற்றல் சூழல்கள் தேவையில்லாதபோதும் கூட அடிக்கடி சிறப்புப் பிரிவுகளில் வைக்கப்படுகிறார்கள். இந்த இடங்கள் சகாக்களுடன் சேர்ந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழக்கச் செய்கின்றன. மேலும் அறிவுசார் தாழ்வு மனப்பான்மைக்கு ஒத்ததாக இயலாமை பற்றிய சேதப்படுத்தும் கருத்துக்களை வலுப்படுத்துகின்றன. ஒரு பங்கேற்பாளர்,

*“என் மகள் தெளிவாக சிந்திக்க முடியும், மற்ற சிறுவர்களைப் போலவே படிக்க விரும்புகிறாள், ஆனால் அவள் சக்கர நாற்காலியைப் பயன்படுத்துவதால் மட்டுமே*

[28] 1994 ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற விசேட தேவைகள் கல்விக்கான உலக மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சலமன்கா அறிக்கை, அரசாங்கங்கள் உள்ளடக்கிய கல்வி முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், பாடசாலைகள் மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து குழந்தைகளையும் உள்ளடக்கியதாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறது. இது கல்வி உரிமை மற்றும் உள்ளடக்கிய, குழந்தைகளை மையமாகக் கொண்ட கற்பித்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. தகவல்களுக்கு
ஆதாரம்: https://www.european-agency.org/sites/default/files/salamanca-statement-and-framework.pdf (கடைசியாக அணுகப்பட்ட தேதி : 17/07/2025)

*ஒதுக்கி வைக்கப்படுகிறாள். அது அவளுக்கும் மற்றவர்களுக்கும் என்ன செய்தியை அனுப்புகிறது?'*[29] எனக் குறிப்பிட்டார்.

அணுகக்கூடிய பாடசாலைகள் இருக்கும்போது, அவை பெரும்பாலும் கிராமங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ளன. சில சமயங்களில் ஒன்று 25 அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களுக்கு சேவை செய்கிறது. போக்குவரத்து வசதிகள் இல்லை அல்லது கட்டுப்படியாகவில்லை. பெற்றோர்கள், குறிப்பாக தாய்மார்கள், நீண்ட பயணங்களின் போது தங்கள் மகள்களின் பாதுகாப்பு குறித்து கடுமையான கவலைகளை வெளிப்படுத்தினர். இலங்கையில் பாலியல் துன்புறுத்தல் பரவலாக இருப்பதால், இந்தக் கவலைகள் ஆதாரமற்றவை அல்ல, ஆய்வுகள் சுமார் 90% பெண்கள் பொதுப் போக்குவரத்தில் துன்புறுத்தலை அனுபவித்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன.[30] குறைபாடுகள் உள்ள சிறுமிகளைப் பொறுத்தவரை, அபாயங்கள் அதிகரிக்கின்றன. பாலினம் அவர்களை துன்புறுத்தலின் இலக்காக ஆக்குகிறது, அதே நேரத்தில் இயலாமை அவர்களை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்குவதோடு தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவோ அல்லது உதவியை நாடவோ இயலாததாக ஆக்குகிறது.[31] இந்தச் சூழலில், தினசரி பயணத்தால் உடல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் சோர்வடைந்தவுடன், தங்கள் மகள்களை பாடசாலையிலிருந்து விலக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று பல குடும்பங்கள் உணர்ந்தன.

பிரதான பாடசாலைகளுக்கும் கூட, மாற்றுத்திறனாளி பெண்கள் மிகப்பெரிய உடல் மற்றும் அமைப்பு ரீதியான தடைகளை எதிர்கொள்கின்றனர். பாடசாலைக் கட்டடங்களில் சாய்வுதளங்கள், அணுகக்கூடிய கழிப்பறைகள் மற்றும் பிற அத்தியாவசிய உள்கட்டமைப்புகள் இல்லை. தாய்மார்கள் அல்லது நண்பர்கள்

---

[29] வவுனியா குழுக்கலந்துரையாடல், 7ஆம் திகதி நவம்பர் 2024

[30] ஆதாரம்:[https://srilanka.unfpa.org/sites/default/files/pub-pdf/Online_DoesSheTravelSafe_Report%2001032019-compressed_1.pdf](https://srilanka.unfpa.org/sites/default/files/pub-pdf/Online_DoesSheTravelSafe_Report%2001032019-compressed_1.pdf) (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 31/08/2025),
ஆதாரம்: [https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC9062655/#fn0018](https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC9062655/#fn0018) (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 30/08/2025)

[31] ஆதாரம் [https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC8820249/](https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC8820249/) (கடைசியாக அணுகப்பட்ட திகதி: 30/08/2025)

பெரும்பாலும் மாணவர்களை மாடிக்கு மற்றும் வகுப்பறைகளுக்கு ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளது. பல்கலைக்கழக மட்டத்தில், விரிவுரை அரங்குகள் பெரும்பாலும் லி.்.ப்ட் அல்லது மாற்று ஏற்பாடுகள் இல்லாமல் மேல் தளங்களில் அமைந்துள்ளன. இந்த கட்டமைப்புத் தடைகள் வருகையைத் தடுப்பது மட்டுமல்லாமல், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு விலக்கு அளிக்கும் செய்தியையும் அனுப்புகின்றன.

மற்றொரு தொடர்ச்சியான சவால், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கற்பிக்கும் திறன் கொண்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் கடுமையான பற்றாக்குறையாகும். குழுக் கலந்துரையாடலின் போது, அரசு சாரா (NGO) நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட்ட முன்னர் செயலில் இருந்த அரசாங்கத் திட்டம், உள்ளடக்கிய கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டிருந்தது என்பதை மாற்றுத்திறனாளிப் பெண்கள் பகிர்ந்து கொண்டன. இருப்பினும், வெளிப்புற நிதி முடிந்ததும், இந்த முயற்சிகள் கலைக்கப்பட்டன. மேலும் பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு தொடர்ச்சியான ஆதரவை உறுதி செய்யாமல் பொது அமைப்பில் மீண்டும் உள்வாங்கப்பட்டனர்.

செவித்திறன் குறைபாடுள்ள மாணவர்கள் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆரம்பக் கல்வி மையங்களில் சைகை மொழியைப் பயன்படுத்தி தொடர்பு கொள்ளக்கூடிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் யாரும் இல்லை என்பதுடன் செவித்திறன் குறைபாடுள்ள ஆசிரியர்கள் கூட இல்லை. ஒரு பங்கேற்பாளர் தனது பாடசாலை அனுபவத்தை இவ்வாறு விவரித்தார்:

*“நான் மற்றவர்களைப் பார்த்து, அவர்களின் புத்தகங்களிலிருந்து நகலெடுத்துப் படித்தேன், ஆனால் ஆசிரியர்கள் என்னைத் திட்டினர், மாணவர்கள் தங்கள் குறிப்புகளை மறைத்தனர். மொழிபெயர்ப்பாளர்கள் இல்லை, என்ன கற்பிக்கப்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை”.*[32]

[32] கண்டி குழுக்கலந்துரையாடல், 29ஆம் திகதி ஒக்டோபர் 2024

மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாதது அல்லது பயிற்சி பெறாதவர்களின் பயன்பாடு கற்றலை மேலும் தடுக்கிறது. இலங்கை சைகை மொழியில் தரப்படுத்தல் இல்லாதது, பல்வேறு பாடசாலைகளும் ஆசிரியர்களும் வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்துவதால் குழப்பத்திற்கு வழிவகுக்கிறது.

பிரதேச வேறுபாடுகளால் இந்த நிலைமை மேலும் சிக்கலாகிறது. எடுத்துக்காட்டாக, பொலன்னறுவையில், செவித்திறன் குறைபாடுள்ள பல பெண்கள் சைகை மொழியில் முறையான கல்வியைப் பெறவில்லை, மேலும் தங்கள் குடும்பங்களுக்குள் தொடர்பு கொள்ள உதடு வாசிப்பு மற்றும் கை சைகைகளை மட்டுமே நம்பியுள்ளனர். மற்ற பெண்களைச் சந்திக்கும் போது, பொதுவான மொழி இல்லாததால், அவர்கள் பெரும்பாலும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள சிரமப்படுகிறார்கள். வவுனியாவிலும் இதேபோன்ற ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது, அங்கு உள்@ர் காது கேளாதோர் பாடசாலை இல்லாததால் சிறுவர்கள் கல்வி பெற யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

அணுகக்கூடிய கற்றல் பொருட்கள் இல்லாததும் ஒரு பெரிய தடையாக உள்ளது. பிரெய்லி பாடப்புத்தகங்கள் அடிக்கடி தாமதமாகின்றன, மேலும் சில கல்வி வலயங்களில் வாரத்திற்கு ஒரு முறை மாணவர்களைச் சந்திக்கும் ஒரே ஒரு பிரெய்லி ஆசிரியர் மட்டுமே உள்ளார். மேலும், பார்வை குறைபாடுள்ள நபர்களுக்கான பிரெய்லி மட்டுமே வாசிப்பு வடிவம் அல்ல என்றும், ஒலிப்புத்தகங்கள் மற்றும் தொட்டுணரக்கூடிய கிராபிக்ஸ் போன்ற பிற அணுகக்கூடிய வடிவங்களில் உள்ள பொருட்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதாகவும் பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டனர். பல்கலைக்கழக மட்டத்தில் கூட, பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் பெரும்பாலும் கலைப் பீடத்திற்கு மட்டுமே பிரத்தியேகமாக அனுப்பப்படுகிறார்கள், ஏனெனில் அறிவியல் மற்றும் பிற பார்வை தேவைப்படும் துறைகள் அணுக முடியாதவை.

மாற்றுத்திறனாளி மாணவர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கல்வியை மாற்றியமைக்க இந்த அமைப்பு தவறவிட்டது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துகிறது. மட்டக்களப்பைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிப் பெண் ஒருவர், தவறவிட்ட வாய்ப்புகளைப் பற்றிப் பேசுகையில்,

*"இப்போது நமக்கு நாமே கல்வி கற்கவும் வேலை தேடவும் நேரம் இல்லை. நாம் இப்போது பெரியவர்களாகிவிட்டோம். ஏற்கனவே நமது வாய்ப்பை இழந்துவிட்டோம். எனவே, இன்னும் வாய்ப்புள்ள புதிய தலைமுறை பெண்கள் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் கல்வி கற்க வேண்டும், இந்த சுழற்சியை நிறுத்த வேண்டும்"* என்றார்[33].

கல்வியிலிருந்து விலக்கப்படுவதன் தாக்கம் வகுப்பறைக்கு அப்பால் நீண்டுள்ளது.

*"கல்வி அல்லது திருமணம் என்பது இலங்கையில் சமூக ஏணியில் முன்னேறுவதற்கான வழிகள். இருப்பினும், இலவசக் கல்வியை அணுகும்போது மாற்றுத்திறனாளிப் பெண்கள் தடைகளை எதிர்கொள்கின்றனர், அது அவர்களை கல்வி கற்கவிடாமல் தடுக்கிறது. பின்னர் அவர்கள் திருமணத்தைத் தேர்வு செய்கிறார்கள், மேலும் அவர்கள் கல்வி கற்காததால், அவர்கள் யாரையாவது திருமணம் செய்து கொள்கிறார்கள், மேலும் பெரும்பாலும் வீட்டு வன்முறையை எதிர்கொள்கின்றனர்".*[34] என்று ஒரு பங்கேற்பாளர் கூறியது போல.

கல்வி இழப்பு ஒரு பெண்ணின் தனக்காக வாதிடும் அல்லது வேலை வாய்ப்புகளை அணுகும் திறனைக் குறைக்கிறது, இதனால் அவள் சுரண்டலுக்கு ஆளாக நேரிடும்.

இறுதியில், இலங்கையில் உள்ள கல்வி முறை, புறக்கணிப்பு, தவறான தகவல் கொள்கை மற்றும் அர்த்தமுள்ள உள்ளடக்கமின்மை ஆகியவற்றின் கலவையால், WWD- இன் கற்றல் உரிமையை தொடர்ந்து மறுக்கிறது. உள்கட்டமைப்பு, ஆசிரியர் பயிற்சி, கல்விப் பொருட்கள் மற்றும் கொள்கை செயல்படுத்தலில் அவசர சீர்திருத்தங்கள் இல்லாவிட்டால், WWD-இன் தலைமுறைகள் துன்புறுத்தல் மற்றும் கொடுமைப்படுத்துதலுக்கு ஆளாக நேரிடும், பொருளாதார சுதந்திரத்திற்கான

---

[33] மட்டக்களப்பு குழுக்கலந்துரையாடல், 6ஆம் திகதி நவம்பர் 2024

[34] கொழும்பு குழுக்கலந்துரையாடல், 10ஆம் திகதி ஒக்டோபர் 2024

வாய்ப்புகளிலிருந்து விலக்கப்பட்டு, வறுமை, சார்பு மற்றும் ஓரங்கட்டப்படுதல் சுழற்சிகளில் சிக்கிக் கொள்ளும்.

# பரிந்துரைகள்

## அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) குழுவிற்கான பரிந்துரைகள்

இலங்கையின் ஐந்து மாவட்டங்களில் உள்ள மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமிகளைக் கொண்ட குழுக் கலந்துரையாடலின் போது FGDகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், ICES தனது நிழல் அறிக்கையில் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை குழுவிற்கு பின்வரும் பரிந்துரைகளை சமர்ப்பித்தது.

1. இலங்கை அரசாங்கம் (GOSL), பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) உறுப்புரை 1 (பாகுபாட்டை நீக்குதல்) மற்றும் மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு சம வாய்ப்புகளை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை கோரும் பொது பரிந்துரை இலக்கம் 18 ஆகியவற்றின் படி, மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கு பதிலளிக்க உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) உறுப்புரை 2 இன் படி, மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமிகள் உள்ளிட்ட மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், உணரவும், அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் உறுப்பினர்களாக நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான “மாற்றுத்திறனாளி உரிமைகள் ஆணைக்குழுவை“ அரசு நிறுவ வேண்டும், இது அரச தரப்புகளின் சட்டமன்ற மற்றும் நிறுவன நடவடிக்கைகள் மூலம் பாகுபாட்டை நீக்க வேண்டும் என்று கோருகிறது.

3. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் உடன்படிக்கையில் (CRPD) உள்ள மதிப்புகள் மற்றும் உரிமைகளை வரைந்து, மாற்றுத்திறனாளிகள் பெண்கள் மற்றும் இளம்பெண்கள் உட்பட மாற்றுத்திறனாளிகளின் முழு பங்கேற்புடன் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய புதிய சட்டத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. பொது பரிந்துரை இலக்கம் 6-ன் படி, மாற்றுத்திறனாளி தொடர்பான தேசிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நிதி மற்றும் ஏனைய வளங்களை வழங்குவதுடன், மாற்றுத்திறனாளிப் பெண்கள் மற்றும் சிறுமிகள் அதனை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்பதற்கான வழிமுறைகளை வழங்க வேண்டும்.

5. இலங்கை அரசாங்கம் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகைகளை அதிகரிக்க வேண்டும். தகுதி அளவுகோல்களை எளிமையாக்க வேண்டும். மேலும் சுதந்திரம் மற்றும் தன்னிறைவை வளர்ப்பதற்கு மிகவும் சமமான, தேவைகள் அடிப்படையிலான ஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

6. பெண்கள் உட்பட அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும், பாகுபாடு மற்றும் துஷ்பிரயோகத்திற்கு எதிரான பாதுகாப்புடன், அரசு முறையான மற்றும் உள்ளடக்கிய மாற்றுத்திறனாளி அடையாள அட்டையை நிறுவ வேண்டும். இந்த அமைப்பு இலவச போக்குவரத்து மற்றும் மருத்துவ சேவைகளை அணுகும்போது முன்னுரிமை போன்ற அத்தியாவசிய நன்மைகளுக்கான அணுகலை அவர்களுக்கு வழங்க வேண்டும். பெண்கள் தங்கள் இயலாமையை நிரூபிக்க சட்டப்பூர்வ வழியை வழங்குவதன் மூலம், குறிப்பாக சட்ட அமுலாக்க முகவர் அல்லது ஆயுதப்படை உறுப்பினர்களால் துன்புறுத்தலில் இருந்து பாதுகாக்க, இந்த அட்டை தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

7. சைகை மொழி, பிரெய்ல் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட மொழி போன்ற அணுகக்கூடிய வடிவங்களில் SRHR தகவல்கள் கிடைப்பதை அரசு

உறுதிசெய்து, அதை திறம்பட பரப்ப வேண்டும். கூடுதலாக, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) இன் உறுப்புரை 12 மற்றும் அணுகக்கூடிய SRHR சேவைகளுக்கான பெண்களின் உரிமையை வலியுறுத்தும் பொது பரிந்துரை இலக்கம் 24 ஆகியவற்றின் படி, மாற்றுத்திறனாளிப் பெண்களின் தேவைகளுக்கு ஏற்ப, ஒரு விரிவான SRHR கல்வியானது பாடசாலை பாடத்திட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்

8. அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள அனைத்து மருத்துவ ஊழியர்களுக்கும் மாற்றுத்திறனாளிப் பெண்களை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து பயிற்சி அளிக்கப்படுவதையும், ஒவ்வொரு மருத்துவமனையிலும் தகவல் தொடர்பாடலுக்கு ஒரு சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் இருப்பதையும் அரசு உறுதி செய்ய வேண்டும்.

9. பொது கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள், சுகாதார நிலையங்கள், தனியார் மற்றும் பொதுப் பணியிடங்கள், வீடுகள், போக்குவரத்து உட்பட கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள பௌதீக உட்கட்டமைப்பின் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு ஆகியவற்றில் அனைத்து குறைபாடுகளையும் பூர்த்தி செய்யும் உலகளாவிய வடிவமைப்பு நடைமுறையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். பொது இடங்களில் முழுமையாக அணுகக்கூடிய மற்றும் சுகாதாரமான சுகாதார வசதிகளுக்கான ஏற்பாடு இதில் அடங்கும்.

10. தொழிற்கல்வி பாடத்திட்டங்களை மிகவும் உள்ளடக்கியதாகவும், பிரதான தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி, தொழிலாளர் சந்தை திறன் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி திட்டங்களுக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலம் இலங்கை அரசு மாற்றுத் திறனாளிப் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும். தொழிற்கல்வி பாலின அடிப்படையிலான ஒரே மாதிரியான கருத்துக்களை ஊக்குவிக்கக் கூடாது. இந்த நடவடிக்கைகள் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) இன் உறுப்புரைகள் 10 மற்றும் 11

மற்றும் பொது பரிந்துரை இலக்கம் 36 உடன் ஒத்துப்போகின்றன. இது உள்ளடக்கிய கல்வி, பயிற்சிக்கான சம அணுகல் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான வாய்ப்புகளை எடுத்துக்காட்டுகிறது.

11. உயர்தர, மலிவு விலையில் உதவிச் சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றிற்கு, குறிப்பாக மாற்றுத்திறனாளிப் பெண்கள் உட்பட, இலங்கை அரசு சலுகைகள் மற்றும் வரிச் சலுகைகளை வழங்க வேண்டும். உதவி சாதனங்கள் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்படுவதை உறுதிசெய்ய, தனிப்பட்ட தேவை மதிப்பீடுகள் நடத்தப்பட வேண்டும், மேலும் தரமற்ற அல்லது சேதமடைந்த உபகரணங்களை நீண்டகாலமாகப் பயன்படுத்துவதைத் தடுக்க மாற்று செயல்முறைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

12. இலங்கை அரசு சலமன்கா அறிக்கை, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) பொது பரிந்துரை இலக்கம் 36 மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) இன் உறுப்புரைகள் 10 மற்றும் 14 ஆகியவற்றுடன் இணக்கமான ஒரு விரிவான மற்றும் உள்ளடக்கிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டும். இந்தக் கொள்கை, குறிப்பாக கிராமப்புற மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து குறைபாடுகள் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின், ஆரம்பகால குழந்தைப் பருவம், ஆரம்ப நிலை, இடைநிலை மற்றும் உயர் கல்விக்கு சமமான அணுகலைப் பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இது கட்டமைப்பு மற்றும் மனப்பான்மை தடைகளை நீக்கி, அனைத்து கற்றல் நிலைகளிலும் உள்ளடக்கிய சூழல்களை ஊக்குவிக்க வேண்டும்.

13. ஆரம்பகால குழந்தைப் பருவ கல்வி மையங்கள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் மற்றும் உள்ளடக்கிய கற்பித்தல்

பொருட்களைக் கொண்டிருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். இதில், மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய கற்பித்தல், இலங்கை சைகை மொழி மற்றும் பார்வை, கேட்கும் திறன் மற்றும் அறிவுசார் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு கற்பிப்பதற்கான முறைகள் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அடங்கும். பாடசாலைகளில் தகுதிவாய்ந்த சைகை மொழி மொழிபெயர்ப்பாளர்களைப் பணியமர்த் துவதோடு செவிப்புலன் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு தொடர்பாடல் அணுகலை உறுதி செய்ய வேண்டும்.

14. பிரெய்ல், பெரிய அச்சு, ஒலி மற்றும் தொட்டுணரக்கூடிய வடிவங்களில் அணுகக்கூடிய கற்றல் பொருட்களை சரியான நேரத்தில் வழங்குவதை அரசு உறுதி செய்ய வேண்டும். அனைத்து கல்வி வலயங்களிலும் பிரெய்லி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் பார்வை குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கான ஆதரவு பரவலாக்கப்பட வேண்டும். மேலதிகமாக, முறையான கல்வி முறையிலிருந்து வெளியேறிய மாற்றுத்திறனாளி பெண்களை இணைக்கும் திட்டங்கள், வயது வந்தோர் கல்வி வாய்ப்புகள் மற்றும் தொழில் மற்றும் உயர் கல்விக்கான நெகிழ்வான பாதைகளை அரசு நிறுவ வேண்டும்.

15. மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விரைவில் நிறுவப்படவுள்ள தேசிய பெண்கள் ஆணைக்குழுவும் மாற்றுத்திறனாளிப் பெண்கள் தங்கள் பணியில் ஒரு முக்கிய முன்னுரிமையாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மாற்றுத்திறனாளிப் பெண்களின் உரிமைகளின் பாதுகாப்பு, ஊக்குவிப்பு மற்றும் முழுமையாக உணர்தலை உறுதி செய்வதற்காக இரு நிறுவனங்களும் அரச நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்துடன் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

## பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) குழுவால் செய்யப்பட்ட பரிந்துரைகள்

2025 ஆம் ஆண்டு இறுதி அவதானிப்புகளின் போது, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) செயற்குழுவால் இலங்கை அரசுக்கு பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

"மாற்றுத்திறனாளிப் பெண்கள் மற்றும் சிறுமிகள்"

55. அரச தரப்பில் மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமிகள், குறிப்பாக பொதுப் போக்குவரத்து, நீதி, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரப் பராமரிப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் தொடர்பாக, பல்வேறு வகையான பாகுபாடுகளை எதிர்கொள்கின்றனர் என்பதை செயற்குழு கவலையுடன் குறிப்பிடுகிறது.

56. மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நீதி, உள்ளடக்கிய கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகள் உட்பட அணுகக்கூடிய சுகாதார சேவைகள் போதுமான அளவில் கிடைப்பதையும், அவர்களுக்கு நியாயமான தங்குமிடம், அதிநவீன உதவி தொழில்நுட்பங்கள் மற்றும் அரசின் அனைத்துப் பகுதிகளிலும் அணுகல் கிடைப்பதையும் அரச தரப்பு உறுதி செய்ய வேண்டும் என்று செயற்குழு பரிந்துரைக்கிறது".

(CEDAW) செயற்குழுவின் இறுதி அவதானிப்புகள், குறிப்பாக கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பாக, மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் பல தடைகளை ஒப்புக்கொண்டாலும், பரிந்துரைகள் பொதுவான இயல்புடையவை யாக இருப்பதோடு இலக்கு சீர்திருத்தத்தை இயக்குவதற்குத் தேவையான தனித்தன்மையைக் கொண்டிருக்கவில்லை.

செயற்குழுவின் பரிந்துரைகளில் உதவி தொழில்நுட்பம், அணுகல்தன்மை மற்றும் நியாயமான இடமளிக்கும் கொள்கை ஆகியவை சேர்க்கப்பட்டதை ICES வரவேற்கிறது. இருப்பினும், நிழல் அறிக்கையில் எழுப்பப்பட்ட முக்கிய பிரச்சினைகள், மாற்றுத்திறனாளி அடையாள அட்டையின் தேவை, மருத்துவ ஊழியர்களுக்கான சிறப்பு பயிற்சி, உரிமைகள் அடிப்படையிலான மாற்றுத்திறனாளி சட்டம் மற்றும் ஒரு சுயாதீன மாற்றுத்திறனாளி உரிமைகள் ஆணைக்குழுவை நிறுவுதல் ஆகியவை வெளிப்படையாகக் கவனிக்கப்படவில்லை.

இந்த குறைபாடுகள் சர்வதேச அறிக்கையிடலில் ஒரு பரந்த சவாலை பிரதிபலிக்கின்றன. பொதுவான உறுதிமொழிகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டாலும், நிதி ஒதுக்கீடு, மேற்பார்வை வழிமுறைகள் மற்றும் கொள்கை உள்கட்டமைப்பு போன்ற கள மாற்றத்தை செயல்படுத்தும் செயல்பாட்டு விவரங்கள் பெரும்பாலும் வெளிப்படுத்தப்படாமல் விடப்படுகின்றன.

எனவே, இந்த இடைவெளியைக் குறைப்பதில் சிவில் சமூகம் இப்போது குழுவின் பரிந்துரைகளை தெளிவான வக்காலத்து கோரிக்கைகளாக மொழிபெயர்ப்பதன் மூலமும், உள்நாட்டு சீர்திருத்தங்களுக்கான பரப்புரை மற்றும் பின்தொடர்தல் அறிக்கைகள் மற்றும் தேசிய செயல் திட்டங்கள் மூலமும் அரச இணக்கத்தைக் கண்காணித்தல் மூலமும் ஒரு முக்கிய பங்கை வகிக்க வேண்டும்:

# முடிவுரை

இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள அனுபவங்களும் சவால்களும், இலங்கையில் மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான அர்த்தமுள்ள, உரிமைகள் சார்ந்த சீர்திருத்தத்தை நோக்கி குறியீட்டு உள்ளடக்கத்திற்கு அப்பால் நகர வேண்டியதன் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகின்றன. பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை (CEDAW) குழு போன்ற சர்வதேச வழிமுறைகள் தெரிவுநிலை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான தளங்களை வழங்கினாலும், அவற்றின் தாக்கம் இறுதியில் அரசின் அரசியல் விருப்பம் மற்றும் நிறுவனத் திறன் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டுக் குழுக்களின் தொடர்ச்சியான ஆதரவைப் பொறுத்தது.

பின்வரும் விடய ஆய்வுகள் முந்தைய உறுப்புரைகளில் விவாதிக்கப்பட்ட தரவு மற்றும் கொள்கை இடைவெளிகளுக்குப் பின்னால் உள்ள அன்றாட யதார்த்தங்களை உயிர்ப்பிக்கின்றன. ஒவ்வொரு பரிந்துரையும், ஒவ்வொரு நிறைவேற்றப்படாத வாக்குறுதியும், ஒவ்வொரு கொள்கை தோல்வியும் ஆழ்ந்த மனித செலவைக் கொண்டுள்ளன என்பதை அவை ஒரு சக்திவாய்ந்த நினைவூட்டலாகச் செயல்படுகின்றன.

# இணைப்பு

பின்வரும் விடய ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் அனைத்து பெயர்களும் புனைப்பெயர்கள். சம்பந்தப்பட்ட நபர்களின் தனியுரிமை மற்றும் பெயர் தெரியாத தன்மையைப் பாதுகாக்க அடையாள விவரங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

## விடய ஆய்வு: குசுமின் கதை

### அறிமுகம்

*“நான் என் துணையைச் சார்ந்து இருக்க விரும்பாததால் திருமணம் செய்து கொள்ள மாட்டேன், ஆனால் மாற்றுத்திறனாளி ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமணம் செய்து கொள்ள விருப்பத் தேர்வு இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்”* என்று 20 வயதுடைய, இயக்கக் குறைபாடுள்ள இளம் பெண்ணான குசும் தனது கருத்தைப் பகிர்ந்துக் கொண்டார்.

குழுவில் இளையவர்களில் ஒருவராக இருந்தபோதிலும், உறவுகள் மற்றும் திருமணம் குறித்த கலந்துரையாடலின் போது மிக நெருக்கமான பகுதியில் மௌனத்தை உடைத்த முதல் நபர்களில் குசுமும் ஒருவர். பொதுவில் பேசுவது மிகவும் தடைசெய்யப்பட்டதாக பலர் கருதிய ஒரு உரையாடலைத் அவர் தொடங்கினார். சக்கர நாற்காலி பயனராக, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அடிப்படை சேவைகளுக்கான அணுகல் ஆகியவற்றில் அவரது வாழ்க்கை குறிப்பிடத்தக்க சவால்களால் குறிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தனக்காக கட்டமைக்கப்படாத ஒரு உலகத்தை வழிநடத்துவதற்கு அப்பால், குசும் குழுக் கலந்துரையாடலில் உள்ள சில பல்கலைக்கழக பட்டதாரிகளில் ஒருவராக தனித்து நின்று, விடாமுயற்சி மற்றும் அமைதியான வலிமையின் தெளிவான உணர்வை வெளிப்படுத்தினார்.

### பின்னணி மற்றும் கல்வி

குசுமுக்கு 13 வயதாக இருந்தபோது மூட்டுவலி ஏற்பட்டது, இது அவரது இயக்கத்தை கடுமையாக பாதித்ததோடு அவரது முறையான கல்வியை சீர்குலைத்தது.

வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து சிறப்பு அனுமதி பெற்ற போதிலும், குறைந்த வருகை காரணமாக, அவரது முன்-பல்கலைக்கழகப் பரீட்டைகளுக்கு தோற்ற அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. இது அவரது அலட்சியத்தால் ஏற்பட்டது அல்ல, மாறாக அவரது இயலாமையினால் ஏற்பட்டது.

தனது கல்வியைத் தொடரத் தீர்மானித்த குசும், தனது பரீட்டைகளை தனிப்பட்ட முறையில் முடித்து உள்@ர் அரச பல்கலைக்கழகத்தில் சேர்க்கை பெற்றார். இருப்பினும், பல்கலைக்கழகத்தில் கூட, அணுகல் ஒரு முக்கிய பிரச்சினையாகவே இருந்தது. அவரது பட்டப்படிப்புடன் தொடர்புடைய துறைகள் அனைத்தும் மேல் தளங்களில் அமைந்திருந்ததால், அவற்றை அவர் அணுக முடியாததாக இருந்தது. அவரது தாயார் ஒவ்வொரு நாளும் அவருடன் செல்ல வேண்டியிருந்தது. உடல் மற்றும் நிறுவன தடைகளைத் தாண்டிச் செல்ல அவளுக்கு உதவ வீட்டிலிருந்து பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஒரு அரச பல்கலைக்கழகத்தில் சேரும்போது அவரது குடும்பத்தைச் சார்ந்திருப்பது, மாற்றுத்திறன் உள்ள மாணவர்களுக்கு முறையான ஆதரவு இல்லாததை எடுத்துக்காட்டுகிறது.

**வேலைவாய்ப்புச் சவால்கள்**

அரச பாடசாலைகள் சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்களுக்கு அணுக முடியாதவை எனக் கருதப்பட்டதால், கற்பித்தல் தேர்வுகளை முடித்த பிறகு, குசும் மீண்டும் மீண்டும் ஆசிரியர் பதவிகளில் இருந்து நிராகரிக்கப்பட்டபோது மேலும் தடைகளைச் சந்தித்தார்.

தனது வகுப்பறையை தரை தளத்திற்கு மாற்றுவது போன்ற அடிப்படை மாற்றங்களை வழங்குவதற்குப் பதிலாக, அபிவிருத்தி உத்தியோகர் பதவிக்கு விண்ணப்பிக்குமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. "மிகவும் பொருத்தமானது" என்று வடிவமைக்கப்பட்ட இந்த பரிந்துரை, மாற்றுத்திறன் உள்ளவர்கள் மீது பெரும்பாலும் திணிக்கப்படும் பாரபட்சமான அணுகுமுறைகள் மற்றும் குறுகிய தொழில் பாதைகளை வெளிப்படுத்தியது.

**வரையறுக்கப்பட்ட சுதந்திரம்**

தனது பாதுகாப்பு குறித்த பெற்றோரின் கவலைகள் மற்றும் அணுகக்கூடிய பொது போக்குவரத்து இல்லாததால் ஒரு இளம் பெண்ணாக, குசும் ஒருபோதும் தனியாகப் பயணம் செய்ததில்லை. ஒரு சக்கர நாற்காலி பயன்படுத்துபவராக, அவர் பேருந்துகள் அல்லது ரயில்களைப் பயன்படுத்த முடியாது. மேலும் போக்குவரத்துக்கு தனியார் வாடகை வாகனங்களை நம்பியிருக்க வேண்டும். இது ஒரு விலையுயர்ந்த மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத மாற்று முறையாகும். அப்படியிருந்தும், அவளை வாகனத்தில் ஏற்றி விட யாராவது தேவை. இதனால் அவள் மற்றவர்களின் நல்லெண்ணத்தைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இலங்கையில் அவர்களுக்கு அணுகக்கூடிய பொதுப் போக்குவரத்து அமைப்பு இருந்தால், குசும் அதிக சுதந்திரத்தை (சுயாதீனத் தன்மையை) அடைய முடியும்.

**பொது இடங்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகல்**

பொது இடங்களில் குசுமின் அனுபவங்கள் அவள் எதிர்கொள்ளும் தடைகளை மேலும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. தேர்தல்களின் போது, தனது வாகனத்தை வாக்குச் சாவடிக்குள் அனுமதித்தாலும், தனது வாக்களிக்கும் விருப்பத் தேர்வை உதவியாளர் பார்க்க முடியும் என்பதால் தனது தனியுரிமை பாதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். தனது வேலை செய்யும் இடத்திலும் இதேபோல பொது இடங்களை அணுக முடியாத நிலையில் உள்ளது. வேலையில் இருக்கும்போது, கழிப்பறையை அணுக முடியாததால், அதைப் பயன்படுத்துவதை அவர் முற்றிலுமாகத் தவிர்க்கிறார். வேலைக்கு வருவதற்கு முன்பு வீட்டிலேயே கழிப்பறையைப் பயன்படுத்துகிறார், மேலும் மாதவிடாய் காலத்தில், வேலையில் இருக்கும்போது சானிட்டரி நாப்கின்களை மாற்ற முடியாது, இதனால் மிகுந்த அசௌகரியம் மற்றும் சிரமம் ஏற்படுகிறது.

**உறவுகள் மற்றும் திருமணம்**

திருமணம் என்பது ஒரு தனிப்பட்ட தேர்வு என்பதை குசும் ஒப்புக்கொண்டாலும், தனது சுதந்திரத்தைப் பேணுவதற்கும், வாழ்க்கைத் துணையைச் சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதற்கும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்க முடிவு செய்துள்ளார். இந்த முடிவு அவரது மீள்தன்மையை மட்டுமல்ல, திருமணம் மற்றும் குடும்ப அமைப்புகளுக்குள் குறைபாடுகள் உள்ள பெண்களுக்கு சமூக மற்றும் நிறுவன ஆதரவு இல்லாததையும் பிரதிபலிக்கிறது.

**முடிவு**

குசுமின் கதை தனிப்பட்ட துரதிர்ஷ்டமான கதை அல்ல. இது கட்டமைப்பு ரீதியாக ஒதுக்கப்பட்டதன் பிரதிபலிப்பாகும். அணுக முடியாத பாடசாலைகள் மற்றும் பணியிடங்கள், பாரபட்சமான ஆட்சேர்ப்பு நடைமுறைகள், உள்ளடக்கிய போக்குவரத்து இல்லாதது மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாதது ஆகியவை இலங்கையில் மாற்றுத்திறனாளிப் பெண்கள் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை தொடர்ந்து குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. அணுகல் மற்றும் தன்னாட்சி சலுகைகள் அல்ல, மாறாக உத்தரவாதமான உரிமைகள் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டிய அவசரத் தேவையை அவரது அனுபவம் எடுத்துக்காட்டுகிறது.

## விடய ஆய்வு: நிலந்தியின் கதை

### அறிமுகம்

*''இந்த நாட்டில் உரிமைகளை விட மனப்பான்மை முக்கியமானது. அவர்கள் நமக்கு வேலை வழங்கினாலும், அது பெரும்பாலும் பரிதாபத்தால் தான் ஏற்படுகிறது. நாம் ஏதாவது நல்லதைச் செய்தாலும், "அவளுக்கு இந்த குறைபாடு இருந்தாலும், அவள் இதைச் செய்தாள்'' என்று கூறி அதைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள்."*

50 வயதுடைய இயக்கக் குறைபாடுள்ள ஒரு பெண்மணியான நிலந்தியின் இந்த வார்த்தைகள், வாழ்நாள் முழுவதும் கட்டமைப்பு மற்றும் சமூக விலக்குகளை கடந்து வந்ததை பிரதிபலிக்கின்றன. குழுக் கலந்துரையாடலில், நிலந்தி தனது அனுபவங்களின் தீவிரத்திற்காக மட்டுமல்லாமல், தற்போதைய நிலையை சவாலுக்கு உட்படுத்தவும், மற்ற மாற்றுத்திறனாளி பெண்களை மேலும் சாதிக்கத் தூண்டவும் தனது அசைக்க முடியாத உறுதியுடனும் தனித்து நின்றார்.

### பின்னணி மற்றும் கல்வி

நிலந்தியின் சவால்கள் குழந்தைப் பருவத்திலேயே தொடங்கின. அவளுடைய மாற்றுத்திறன், முறையான கல்வியை தேவையற்றதாக ஆக்குகிறது என்று அவளுடைய பெற்றோர் கருதினர். இருப்பினும், பின்னர் அவள் தொழிற்கல்வியைப் பெற்றாள், இது அவளுக்கு வேலைவாய்ப்பைப் பெற உதவியது. இந்தப் பயிற்சியை அவள் மதிப்பிட்டாலும், அத்தகைய பயிற்சி மையங்கள் காலாவதியானவையாகவும் நவீன வேலைச் சந்தையின் யதார்த்தங்களிலிருந்து துண்டிக்கப்பட்டவையாகவும் இருப்பதை நிலந்தி விரைவாகச் சுட்டிக்காட்டினார். விரிவாகச் சொன்னால், அவை வேலைவாய்ப்பை அரிதாகவே ஆதரிக்கின்றன என்றும், உண்மையான, நீண்டகால தாக்கத்திற்குத் தேவையான உள்ளடக்கிய கட்டமைப்புகள் பெரும்பாலும் இல்லை என்றும் அவர் கூறினார்.

### வேலைவாய்ப்புக்கான சவால்கள்

தனக்கு தொழில் திறன்கள் இருந்தபோதிலும், முறையான கல்வி இல்லாததால், குறிப்பாக நகர்ப்புற முதலாளிகளிடமிருந்து நிலந்தி அடிக்கடி பணிநீக்கம் மற்றும் புறக்கணிப்பை எதிர்கொண்டார். முறையான தகுதிகளுக்கு சாதகமான சமூக சார்புகள் காரணமாக, கிராமப்புற பிரச்சினைகள் குறித்த அவரது நடைமுறை அறிவு மற்றும் புரிதல் பெரும்பாலும் கவனிக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார். இந்த அனுபவங்கள் மாற்றுத்திறனாளிப் பெண்கள் பொருளாதார சுதந்திரத்தை அடைவதைத் தடுக்கும் முறைமை ரீதியான தடைகளை பிரதிபலிக்கின்றன.

### சுகாதாரப் பாதுகாப்பு ரீதியான பாகுபாடு

சுகாதாரத்துறையில் ஏற்பட்ட துயரமான அனுபவங்களை நிலந்தி நினைவு கூர்ந்தார். அதாவது மருத்துவ நிபுணர்களின் பொருத்தமற்ற மற்றும் சுரண்டல் நடத்தையை வெளிப்படுத்தினார். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணாக, அவர் குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவராக இருந்ததோடு அவரால் தகாத தொடுதலைக் கண்டறிய முடியவில்லை. ஒரு மருத்துவர் தனது வீட்டிற்குச் சென்று கூட தேவையற்ற முன்னெடுப்புகளைச் செய்த ஒரு சம்பவத்தை அவர் பகிர்ந்து கொண்டார். இந்த அமைப்புகளில் அவரது பாதிப்பு, அணுகக்கூடிய புகார் வழிமுறைகள் இல்லாததால், அவர் வெளிப்படையாகவும் ஆதரவற்றவராகவும் ஆனார். குறைபாடுகள் உள்ள பெண்களுக்கு, குறிப்பாக இனப்பெருக்க ஆரோக்கியம், தாய்மை மற்றும் விலக்கலின் உணர்ச்சி ரீதியான பாதிப்பு ஆகியவற்றில் மனநலப் பாதுகாப்பு முழுமையாக இல்லாததையும் அவர் எடுத்துரைத்தார்.

### சமூகக் களங்கம் மற்றும் உறவுகள்

*"பல மாற்றுத்திறனாளிப் பெண்கள் திருமணம் மற்றும் உறவுகளுக்கு ஊக்கமளிக்கப்படுவதில்லை. அவர்கள் இறுதியில் இறக்கும் வரை பாவத்தின் பலனை அனுபவிப்பதாகக் கூறப்படுகிறார்கள். எங்கள் பாலியல் தேவைகள் மற்றும் உணர்வுகள் புறக்கணிக்கப்படுகின்றன,"* என்று நிலந்தி வெளிப்படையாகக் கூறினார்.

மாற்றுத்திறன் மற்றும் பெண்மையைச் சுற்றியுள்ள ஆழமாக வேரூன்றிய களங்கத்தின் இதயத்தை அவளுடைய பிரதிபலிப்புகள் வெட்டுகின்றன.

சமூக சார்புகளின் தாக்கத்தை அவளுடைய உறவுகள் மேலும் விளக்குகின்றன. அவளது மாற்றுத்திறன் காரணமாக உறவைத் தொடர அவளது துணைவரை ஒரு சமூகப் பணியாளர் அதைரியப்படுத்தியதனால் அவளுடைய முதல் உறவு முடிவுக்கு வந்தது. மற்றொரு உறவில், அவள் பணம் மற்றும் உழைப்புக்காக சுரண்டப்பட்டாள். இந்த அனுபவங்களைப் பற்றி யோசித்து, பல இளம் மாற்றுத்திறனாளிப் பெண்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் ஆண்களுடன் அறிமுகமில்லாதவர்களாகவும், உறவுகளின் கையாளுதலுக்கு ஆளாகக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள் என்று நிலந்தி குறிப்பிட்டார். பெரும்பாலும் வீட்டில் உணர்ச்சிபூர்வமான ஆதரவு இல்லை என்பதனால் மாற்றுத்திறனாளிப் பெண்கள் அன்புக்காகவும் கவனிப்புக்காகவும் ஏங்குகின்றார்கள் என அவள் குறிப்பிட்டாள்.

சாதாரண விஷயங்களைச் செய்ததற்காக பரிதாபப்படுவதையும், ஆதரவளிப்பதையும், பாராட்டப்படுவதையும் பற்றி அவள் பேசினாள். அவை நேர்மையை அகற்றி தீங்கு விளைவிக்கும் ஸ்டீரியோடைப்களை வலுப்படுத்தும் அனுபவங்கள். நாம் சாதாரணமான ஒன்றைச் செய்தாலும் கூட, நாம் தொடர்ந்து " விசேடமானவர்கள்" என்று முத்திரை குத்தப்படுகிறோம். நாம் தற்போதைய நிலையை எதிர்த்து, நமது உரிமைகளைப் பற்றிப் பேசினால், "அவளால் நடக்க முடியாவிட்டாலும், அவள் நிறையப் பேசுகிறாள்" என்று கூறி அது நிராகரிக்கப்படுகிறது. என்று அவர் மேலும் கூறினார்.

**சுதந்திரமான வாழ்க்கை மற்றும் எதிர்கால நிச்சயமற்ற தன்மை**

பல வருடங்களாக உணர்ச்சி ரீதியான புறக்கணிப்பு மற்றும் கொடுமையைத் தாங்கிய பிறகு, சுய விடுதலையின் தீவிரமான செயலில், நிலந்தி தனது பெற்றோரின் வீட்டை விட்டு வெளியேறினார். இன்று, அவர் ஒரு தங்கும் விடுதியில் சுதந்திரமாக வாழ்கிறார், இது இலங்கையில் ஒரு மாற்றுத்திறனாளிப் பெண்ணுக்கு ஒரு அசாதாரணமான மற்றும்

துணிச்சலான தேர்வாகும். அவ்வாறு செய்வதில் அவள் காட்டும் துணிச்சல், சமூகத்தில் அவள் செய்யும் பணிகளுக்கு உந்துசக்தியாக இருக்கும் அதே உணர்வையே பிரதிபலிக்கிறது. இருப்பினும், அவளுடைய சுதந்திரம் ஆழ்ந்த நிச்சயமற்ற உணர்வால் மென்மையாக்கப்படுகிறது. குடும்ப ஆதரவும் அரசாங்க பாதுகாப்பு வலைகளும் இல்லாததால், பராமரிப்போ அல்லது வீட்டுவசதியோ இல்லாமல் வயதாகிவிடுவதைப் பற்றி நிலந்தி கவலைப்படுகிறார். அவளுடைய கதை மீள்தன்மையின் கதை மட்டுமல்ல, நீண்டகால சமூக ஆதரவில் உள்ள ஆபத்தான இடைவெளிகளையும் வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

இலங்கையில் மாற்றுத்திறனாளிப் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களை நிலந்தியின் கதை பிரதிபலிக்கிறது. உள்ளடக்கிய கல்வி மற்றும் பாரபட்சமான வேலைவாய்ப்பு நடைமுறைகள் இல்லாதது முதல் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சமூக களங்கத்தில் உள்ள பாதிப்புகள் வரை, அவரது அனுபவங்கள் முறையான சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. அவரது சுதந்திரப் (சுயாதீனப்) பயணம் குறிப்பாக வயதான மாற்றுத்திறனாளி பெண்களுக்கு ஊக்கமளிக்கும் அதே வேளையில், சமூக ஆதரவு அமைப்புகளில் உள்ள இடைவெளிகளையும் எடுத்துக்காட்டுகிறது. மாற்றுத்திறனாளி பெண்கள் வெற்றியடையக்கூடிய மிகவும் உள்ளடக்கிய மற்றும் சமமான சூழலை உருவாக்க கொள்கை வகுப்பாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான அழைப்பாக அவரது கதை உள்ளது.

## விடய ஆய்வு: மாலினியின் கதை

### அறிமுகம்

*"என் மகளுக்குக் குழந்தை பிறந்த பிறகு, அவளுக்குக் காது கேட்காது, பேசவும் முடியாது என்பதால், அவளுடன் (மருத்துவமனையில்) தங்குவதற்குக் கேட்டேன். ஆனால் மருத்துவமனை ஊழியர்கள், அவளாள் கர்ப்பமாக முடிந்தால், மீதமுள்ளவற்றையும் அவளே நிர்வகிக்க முடியும் என்று கூறினர். ஆனால் என் மகள் பாலியல் வன்கொடுமையின் விளைவாக கர்ப்பமாகியிருந்தாள்,"* என்று குழுக் கலந்துரையாடலின் போது மாலினியின் தாய் நினைவு கூர்ந்தார்.

20 வயதுக்குட்பட்ட காது கேளாமை கொண்ட இளம் பெண் மாலினி, தனது தாயாரின் அருகில் அமைதியாக அமர்ந்திருந்தார். இருவரும் தங்கள் கதையைப் பகிர்ந்து கொண்டனர். தகவல் தொடர்பாடல் தடைகள் காரணமாக அவரது தாயார் பெரும்பாலான கதையைப் பேசினாலும், இந்தக் கதை இரு பெண்களின் தனிமை, அதிர்ச்சி மற்றும் நிறுவன புறக்கணிப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட அனுபவங்களையும் பிரதிபலித்தது.

### பின்னணி மற்றும் கல்வி

மாலினியின் சவால்கள் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே தொடங்கின. அவரது பகுதியில் மாற்றுத்திறன் உள்ள குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்புகள் இல்லாததால், அவர் 5 ஆம் வகுப்பு வரை மட்டுமே பாடசாலைக்குச் செல்ல முடிந்தது. வேறொரு மாவட்டத்தில் காது கேளாதோருக்கான கல்வியில் நிபுணத்துவம் பெற்ற பாடசாலைக்கு அவள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவளுடைய பெற்றோரால் அவளை அனுப்ப முடியவில்லை. இதன் விளைவாக, மாலினி 10 வயதிலிருந்தே வீட்டிலேயே இருந்ததால் முக்கியமான கல்வி மற்றும் சமூகமயமாக்கல் ஆண்டுகளை இழந்தார்.
இதன் காரணமாக, மாலினி ஒருபோதும் முறையாக சைகை மொழியைக் கற்றுக்கொள்ளவில்லை என்று அவரது தாயார் விளக்கினார். அதற்கு பதிலாக, அவர் முக்கியமாக உதடு வாசிப்பு மூலம் தனது தாயுடன் தொடர்பு கொள்கிறார், மேலும்

பல ஆண்டுகளாக சில சைகை மொழியை முறைசாரா முறையில் கற்றுக்கொண்டார். இருப்பினும், குழுக் கலந்துரையாடலில் இருந்த சைகை மொழிபெயர்ப்பாளர் ஒருவர், அவரது கையொப்பம் பெரும்பாலும் தவறானதாகவும் புரிந்துகொள்ள கடினமாகவும் இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்தத் தொடர்பாடல் தடையானது, அவரது சகாக்களுடன் திறம்பட தொடர்புகொள்வதைத் தடுக்கிறது, மேலும் செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்திலிருந்து அவரை மேலும் தனிமைப்படுத்துகிறது.

**அதிர்ச்சி மற்றும் தனிப்பட்ட சவால்கள்**

அவரது தாயார் குடும்பத்தை ஆதரிப்பதற்காக வெளிநாட்டில் வீட்டு பணியாளராக பணிபுரிந்த ஆண்டுகளில், மாலினி தனது உறவினரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் கர்ப்பத்தில் முடிந்தது. நீதி அல்லது போதுமான ஆதரவு சேவைகளைப் பெற முடியாத அவரது பெற்றோர், அவளை இந்நிலைக்கு ஆக்கியவரை திருமணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்தனர். இருப்பினும், திருமணத்திற்குப் பிறகும், மாலினி தனது கணவர் தன்னைத் தொட முயற்சிக்கும்போதெல்லாம் கத்துவார், இது அவர் தொடர்ந்து சுமந்து வரும் உளவியல் மற்றும் உணர்ச்சி அதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது என்று அவரது தாயார் பகிர்ந்து கொண்டார்.

சட்டப்படி திருமணமாகிவிட்டாலும், மாலினி இப்போது அவளது குழந்தையுடன் அவளுக்கு ஆதரவளிக்கும் அவளது பெற்றோருடன், வசித்து வருகிறார். இந்த ஏற்பாடு, அவருக்கு சில பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்கினாலும், குடும்பத்தில் குறிப்பிடத்தக்க உணர்வுபூர்வமான மற்றும் நிதி அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. மேலும் அவர்களின் தற்போதைய சுமைகளையும் அதிகரிக்கிறது.

**சுகாதாரப் பாகுபாடு**

மாலினி தனது கர்ப்ப காலத்திலும் அதற்குப் பிறகும் மருத்துவமனை ஊழியர்களிடமிருந்து புறக்கணிப்புக்கு உள்ளாகும் வகையிலும் கூருணர்வற்ற வகையிலும் நடத்தப்பட்டார். அவரது செவித்திறன் குறைபாடு மற்றும் அவரது கர்ப்பத்திற்கு வழிவகுத்த அதிர்ச்சிகரமான சூழ்நிலைகள் இருந்தபோதிலும்,

ஊழியர்கள் குறைவான புரிதலையும் இரக்கத்தையுமே காட்டினர். அறிவுறுத்தல்களைப் பின்பற்றாததற்காக ஊழியர்கள் அவரை எவ்வாறு திட்டினார்கள் என்பதை அவரது தாயார் விவரித்தார். ஒருவர், ”கர்ப்பம் தரிக்கும் அளவுக்கு இவளுக்கு புத்திசாலித்தனம் இருந்தது, ஆனால் அவர்களின் அறிவுறுத்தல்களைப் புரிந்து கொள்ளவில்லை” என்று கருத்து தெரிவித்தார். இந்நிலையில் அவர் கேட்கவோ பேசவோ முடியாது என்பதை ஒப்புக்கொள்ளத் தவறிவிட்டார். இந்த நிகழ்வுகள், இயலாமைக்கு உணர்திறன் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதில் தோல்வியை மட்டுமல்ல, மருத்துவ நிறுவனங்களுக்குள் தொடரும் களங்கம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பழிவாங்குவதையும் எடுத்துக்காட்டுகின்றன.

**பொருளாதாரச் சார்பும் வாய்ப்புகள் இல்லாமையும்**

முறையான கல்வி அல்லது தொழிற்கல்வி பயிற்சி இல்லாமல், மாலினியால் வேலைவாய்ப்பைப் பெற முடியவில்லை. அவர் முற்றிலும் மாற்றுத்திறனாளி உதவிக்காகவும், நிதி உதவிக்காகவும் தனது பெற்றோரையே சார்ந்துள்ளார். சமீப காலம் வரை, தனது மாற்றுத்திறனாளி உதவி தனது தந்தையின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது எவ்வாறு, அதனால் அவரது நிதி சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டது என்பதை அவர் பகிர்ந்து கொண்டார். இப்போது அதை தனது சொந்தக் கணக்கிற்கு திருப்பி விட முடிந்தாலும், இந்த உதவியை அவர் நம்பியிருப்பது, மாற்றுத்திறனாளி பெண்கள் பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கான வாய்ப்புகள் இல்லாததை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

**முடிவு**

மாலினியும் அவரது தாயாரும் பகிர்ந்து கொண்ட கதை, இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் கடுமையான யதார்த்தங்களை, வறுமை, அணுக முடியாத தன்மை, வன்முறை மற்றும் நிறுவன பராமரிப்பு இல்லாததன் மூலம் உருவாகும் யதார்த்தங்களை பிரதிபலிக்கிறது. பாலினம், இயலாமை மற்றும் வறுமை ஆகியவற்றின் குறுக்குவெட்டு துஷ்பிரயோகம், சமூக விலக்கு மற்றும் முறையான புறக்கணிப்புக்கு எவ்வாறு அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை அவரது அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன.

அவரது இந்த நிலை உள்ளீர்ப்புள்ள கல்வி, உடல்-உளக் காயம் தொடர்பான-தகவல் சுகாதாரம், உளவியல் சமூக ஆதரவு, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கான பாதுகாப்பு வழிமுறைகள் உள்ளிட்ட விரிவான சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையையும் எடுத்துக்காட்டுகிறது. இது அவரது தாயைப் போன்ற குடும்ப பராமரிப்பாளர்களின் முக்கிய பங்கையும் சித்தரிக்கிறது. அவர்களின் இருப்பு மற்றும் கலந்துரையாடல்கள் பெரும்பாலும் மேலதிக தீங்குக்கும் ஒரு சிறிய அளவிலான பாதுகாப்பிற்கும் இடையிலான வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றன.

# கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையில்

## இலங்கையில் மாற்றுத்திறனாளி பெண்களின் யதார்த்த நிலை

**உவினி பண்டித**

இந்த அறிக்கை, இலங்கையில் உள்ள மாற்றுத்திறனாளிப் பெண்களின் **(WWDS)** அன்றாட யதார்த்தங்களை ஆராய்கிறது. கொழும்பு, கண்டி, பொலன்னறுவை, மட்டக்களப்பு மற்றும் வவுனியாவில் நடத்தப்பட்ட குழுக் கலந்துரையாடல்களின் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டது. அவர்களின் பதிவுகள் கண்ணியம், சமத்துவம் மற்றும் அங்கீகாரத்திற்கான தொடர்ச்சியான போராட்டத்தை வெளிப்படுத்துகின்றன. நலன்புரி மற்றும் பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட அரசு திட்டங்கள் இருந்தபோதிலும், மாற்றுத்திறனாளி பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரப் பராமரிப்பு முதல் தொழில் பயிற்சி வரை கிட்டத்தட்ட ஒவ்வொரு துறையிலும் தடைகளை எதிர்கொள்கின்றனர். அணுக முடியாத உள்கட்டமைப்பு, விலக்கு தகுதி அளவுகோல்கள் மற்றும் வேரூன்றிய பாகுபாடு ஆகியவை இந்த சவால்களை மோசமாக்கி, மாற்றுத்திறனாளி பெண்களை சமூகத்தின் விளிம்புகளுக்குத் தள்ளுகின்றன.

**2025**ஆம் ஆண்டின் தொடக்கத்தில் **CEDAW** குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிழல் அறிக்கையின் அடிப்படையில், இந்த விரிவாக்கப்பட்ட பதிப்பு, மாற்றுத்திறனாளி பெண்கள் சார்புடையவர்களாகவோ அல்லது விதிவிலக்குகளாகவோ கருதப்படாமல், சுயாட்சி, வாய்ப்பு மற்றும் பொது வாழ்வில் முழு பங்கேற்புக்கு உரிமையுள்ள சம குடிமக்களாகக் கருதப்படுவதை உறுதிசெய்ய அவசர சீர்திருத்தங்களைக் கோருகின்றது.

**உவினி பண்டித** கொழும்பில் உள்ள இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் ஒரு ஆய்வாளர் ஆவார்.

INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

ISBN 978-6-24550-244-8
9 786245 502448